
# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

லர் 4 | நவம்பர் 1991 | இதழ் 11



வெளியிடுவோர் :

**ஈரோடு கிறிஸ்துவின் சபையார்**

**2, மணல் மேடு வீதி, ஈரோடு-638 002.**

## வாசக அன்பர்களுக்கு ஓர் நற்செய்தி !

1992-ம் ஆண்டிற்கான திருமறை ஆசான் காலண்டர்கள் தயார்!

வளவளப்பான இந்தியன் ரியல் ஆர்ட் தாளில் 18"×23" சைஸ்

* நவீன அச்சுக்கலை நுணுக்கங்களுடன் பல வண்ணங்களில் தயாராகிக் கொண்டிருக்கிறது.
* காலண்டர் வரலாற்றில் இதுவரை கையாளப் பட்டிராத புதுமையான பாணி.
* பரிசுத்த வேதாகமத்தின் மையக் கருத்துக்களைச் சுருக்கி அழகிய முறையில் தொகுக்கப்பட்டிருக்கிறது.
* விலையோ கொள்ளை மலிவு, ஆறே ரூபாய்தான்.
* முன் பணம் அனுப்புகிற பத்துக்கும் மேற்பட்ட ஆர்டர்களுக்கு தபால் செலவு இல்லை.
* முன் பணம் அனுப்புகிற 25க்கும் மேற்பட்ட ஆர்டர்களுக்கு ஒவவொரு 25க்கும் ஒரு காலண்டர் இனாம்-
* குறைந்த பிரதிகளே அச்சிடப்படுகின்றன. உங்கள் தேவைக்கு முந்துங்கள்.

பி.கு. இது ஓர் ஆண்டுக்குரிய காலண்டர் மட்டுமல்ல காலமெல்லாம் பார்த்து, படித்து மகிழ வேண்டிய ஓர் கருத்தோவியம். வீடுகளிலும் அலுவலகங்களிலும் பிரேம் செய்து மாட்டி வைத்துக் கொள்ளலாம்.

தொடர்பு முகவரி

**E Z. செல்வநாயகம்**
2, மணல் மேடு வீதி
ஈரோடு 638002.

நேரில் வருபவர்கள்
டிசம்பர் 1-ம் தேதிக்கு
மேல் வரவும்

**இதழின் உள்ளே**


1. மனுஷகுமாரன் வரும்போது பூமியிலே விசுவாசத்தைக் காண்பாரோ 1 - 3
2. உங்களுடைய பெயர் ஜீவ புஸ்தகத்தில் எழுதப்பட்டிருக்கிறதா? 4 - 9
3. நல்ல மாமியார் 10 - 12
4. பழக்க வழக்கங்கள் 13 - 15
5. கிருபை என்றால் என்ன? 16 - 20
6. மாற்கு 6:41-42 தரும் படிப்பினைகள் 21 - 24
7. செத்த ஈக்கள் 25 - 27
8. புதிய ஏற்பாட்டின் இரட்சிப்பின் திட்டம் 28

# THIRUMARAI AASAAN

Editor
E.Z. SELVANAYAGAM

Honorary Editor
J.C. CHOATE

Published by Church of Christ
2, Manalmedu Street, ERODE-638 002, Tamil Nadu, India
Pleading for the restoration of pure New Testament Christianity :

Vol 4. November—1991 Issue 11


**ஆசிரியவுரை**

## மனுஷகுமாரன் வரும்போது பூமியிலே விசுவாசத்தைக் காண்பாரோ

லவோதிக்கேயா என்னும் நகரம் ரோமப் பேரரசுக்குட்பட்ட ஆசியா மைனர் என்ற மாநிலத்தின் மிகப் பெரிய வியாபார ஸ்தலம். அது கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் செலியூசிட் அந்தியோகஸ் என்ற அரசனால் அவனுடைய மனைவி லயோதிஸ் பெயரால் ஏற்படுத்தப்பட்ட நகரம். அது அமைக்கப்பட்ட இடத்தின் முக்கியத்துவத்தால் அது பல நகரங்களை இணைக்கும் மிகப் பெரிய வியாபாரஸ்தலமாகி பிரபலம் அடைந்திருந்தது.

அந்நகரத்துக்கு அருகாமையில் லக்கஸ் என்னும் ஆறு ஓடுவதால் அப்பட்டணத்துக்குச் சமீபத்தில் செழிப்பான வயல் வெளிகள் இருந்தன. நீர் வளத்தோடு கம்பளி ஆடைகள் நெய்யும் நெசவுத் தொழிலும், கண் நோய் சம்பந்தமான ஆராய்ச்சி நிலையமும், மருத்துவக் கல்லூரியும் இருந்தன. இப்படி லவோதிக்கேயா நகரம் ஒரு செல்வம் செழிக்கும் சிங்காரச் சீமையாக இருந்தபடியால் பணப்புழக்கமும் அந்நிய செலவாணி லேவாதேவி செய்யும் வங்கிகளும் பெருகின.

சுமார் கி.பி. 60-ம் ஆண்டில் அங்கே ஒரு பூகம்பம் ஏற்பட்டுப் பெரும் சேதம் உண்டாயிற்று. அதைக் கேள்விப்பட்ட ரோமப் பேரரசு அந்த இழப்பை ஈடு கட்ட ஒரு பெருந் தொகையை இனாமாக வழங்க முன் வந்தது. ஆனால் அந்நகரத்து

நிர்வாகம் அதனை ஏற்க மறுத்து, தங்கள் சொந்த நிதி ஆதாரங்களைக் கொண்டே சமாளித்துக் கொண்டது என்றால் அதன் செல்வச் செழிப்பை நீங்களே நிதானித்துக் கொள்ளுங்கள்.

இந்நகரம் கலை நுணுக்கங்களிலும் குறைந்ததல்ல. பிரமாண்டமான கோவில்களும் பொழுது போக்குக்குத் தேவையான பல்வேறு அமைப்புகளும், மண்டபங்களும் நிறைந்திருந்தன. இப்படிப் பல முனைகளிலும் சிறப்பு எய்தியிருந்தபடியால் அந்நகரத்து மக்கள் பெருமைக்காரர்களாகவும், அகந்தையுள்ளவர்களாகவும் இருந்தார்கள்.

அவர்களுக்கு ஏதாவது ஒரு குறை இருந்தது என்றால் அது தண்ணீர்ப்பிரச்சனை தான். நகருக்குச் சற்றுத் தொலைவில் உள்ள சூடான நீர் சுரக்கும் சுனைகளிலிருந்து நீண்ட குழாய்கள் வழியாக நீர் கொண்டு வர வேண்டியிருந்ததால் தண்ணீர் நகரத்துக்கு வந்து சேரும் போது சூடு குறைந்து வெது வெதுபாயிருக்கும், இது ஒன்றைத் தவிர பலவகையிலும் சிறந்து விளங்கிய இந்நகரத்துக்கு மிஷனரிப் பயணங்கள் ஆரம்பித்த நாட்களிலேயே சுவிசேஷம் சென்றடைந்தது. இங்கு முதல் முதல் சுவிசேஷத்தை எடுத்துச் செல்லும் சிலாக்கியத்தைப் பெற்ற ஊழியர் அல்லது அப்போஸ்தலர் யார் என்று திட்டமாய்த் தெரியவில்லை. இருந்த போதிலும் ஒருவேளை எப்பாப்பிரா என்னும் கொலோசே பட்டணத்து நபர் அங்கே சுவிசேஷத்தை அறிவித்திருக்கக் கூடும் என்று நம்ப இடம் இருக்கிறது. (கொலோ *4:12,13*) ஆனால் அப்போஸ்தலன் பவுல் அங்கு செல்லவில்லை என்பது மட்டும் தெளிவாகத் தெரிகிறது கொலோ *2:1*) எப்படியோ அந்த செல்வம் கொழிக்கும் சீமையில் நிறுவப்பட்ட திருச்சபையை அந்த பட்டணத்துச் செல்வமும் சொகுசும் பற்றிக் கொண்டு சீரழியச் செய்து விட்டது. பணம் பெருகப் பெருகப் பக்தி குறைந்து சுய திருப்தி, அகந்தை, ஆடம்பரம் வளர ஆரம்பித்தது. தேவனைப் பற்றிக் கொள்வதற்குப் பதிலாக அவரால் அருளப்பட்ட சுகங்களையும் பற்றிக் கொள்ள ஆரம்பித்தது (II தீமோ *3;1-5)*

ஒரு வேளை இந்தப் பட்டணத்து சூழ்நிலையை மனதில் கொண்டு தான் வெது வெதுப்பு திரவிய சம்பன்னன் நிர்வாணி வஸ்திரம் கண்களுக்குக் கலிக்கம் என்ற சொற்களால் அந்தச் சபையின் தூதனுக்கு எழுதும்படி சொல்லப்பட்டிருக்கிறதா என்று தெரியவில்லை.

அந்தச் சபையின் நிலைமையை போலவே தற்காலத்தில் மனிதர்களால் தோற்றுவிக்கப்பட்ட பல்வேறு நிறுவனங்கள் தங்களையும் திருச்சபை என்று கூறிக் கொண்டு தேவனின் வார்த்-

ஸ்தகள் அடங்கிய பரிசுத்த வேதாகமத்தை முழுமையாக நம்பாமலும், அதில் உள்ளவைகள் அனைத்துமே ஏற்றுக் கொள்ளக் கூடியவைகள் அல்ல என்றும், அதில் மனித ஞானமும் கற்பனையும் கலந்த, நீதியைப் படிப்பிப்பதற்காக ஜோடனை செய்யப்பட்ட கட்டுக்கதைகள் உண்டு என்றும், இயேசுகிறிஸ்துவின் கன்னிப் பிறப்பை அபத்தமென்றும், கிறிஸ்து ஒரு சாதாரண மனிதன் தான் என்றும், அவரைத் தெய்வமாக்கியது மனிதர்கள் தான் என்றும் அவர் சிலுவையில் மரிக்கவே இல்லை, வெறும் மயக்க நிலையில்தான் இருந்தார் என்றும், மயக்கம் தெளிந்தவுடன் கல்லறையின் மீது வைக்கப்பட்டிருந்த கல்லைப் புரட்டித் தள்ளி விட்டு வெளியே வந்து விட்டார் என்றும், எந்த மதத்தவன் ஆயினும், தான் தொழுகிற கடவுளை உண்மை மனதோடு தொழுது வந்தால் அவனுக்கு நித்திய வாழ்வு கிட்டும் என்றும் மதங்கள் யாவுமே இறைவனை அடைவதற்கு, ஏற்படுத்தப்பட்ட பல்வேறு வழிகள் தான் என்றும், ஆகவே, ‘எம்மதமும் சம்மதம்’ என்ற கோட்பாட்டின் அடிப்படையில் கிறிஸ்தவனும், முகமதியனும், இந்துவும் ஒன்று கூடி கிறிஸ்மஸ், ரம்ஜான், தீபாவளி ஆகிய பண்டிகைகளைக் கொண்டாடுவதின் மூலம் ஒற்றுமை உருவாகி ஐக்கியம் வளரும் என்றும், எல்லா மதத்தினரும் அவரவர்கள வேத புத்தகங்களிலிருந்து ஓதி, இறைவனுக்கு வழிபாடு நடத்தலாம் என்றும் கருத்துக் கொண்டிருக்கிற மதத் தலைவர்களும், குருமார்களும் பெருகி வருகின்றனர்.

ஆலயங்களில் சினிமாப் படங்கள் காட்டப்படுகின்றன, காதல் காட்சிகளை உள்ளடக்கிய நாடகங்கள் அரங்கேறுகின்றன. நல்ல காரியங்களுக்கு நிதி திரட்டுகிறோம் என்ற சாக்கில் சினிமா நடிகைகளின் ஆட்டமும், பாட்டுக் கச்சேரிகளும், சூதாட்டங்களும் நடத்தப்படுகின்றன. பக்திப் பரவசம் பெருகி வழிகிறது போல் எங்கு பார்த்தாலும் கன்வென்ஷன்கள் உயிர் மீட்சிக் கூட்டங்கள், நள்ளிரவு / முழுஇரவு ஜெபங்கள் சினிமாவை மிஞ்சும் நவீன இசைக்கருவிகளும், மேள தாளங்களும் ஒளியை உமிழும் வண்ண விளக்குகளும், சொகுசு நாற்காலிகளும் ஜோடனைகளும், காலம் தவறாது ஒலிக்கும் ஆலயமணிகளும் கூட்டம் கூட்டமாக அழகுப் போட்டியில் கலந்து கொள்கிறாற் போல் ஆண்களும் பெண்களும் உடுத்திக் கொண்டு ஆலயப்பிரகாரங்களுள் ஒய்யாரமாய் நுழைவதுமாக இருந்தாலும் பலன் ஒன்றையும் காணோம். எல்லாமே வெளி வேஷம் தான்.

மனுஷ குமாரன் வரும்போது பூமியிலே விசுவாசத்தைக் காண்பாரோ?

**E.Z. செல்வநாயகம்**

# உங்களுடைய பெயர் ஜீவ புஸ்தகத்தில் எழுதப்பட்டிருக்கிறதா?

வெளிப்படுத்தின விசேஷம் 20:12ல் ''புஸ்தகங்கள் திறக்கப்பட்டன'' என்றும், ''அந்தப் புஸ்தகங்களில் சொல்லப்பட்டிருக்கிற பிரகாரம் மரித்தோர் நியாயத் தீர்ப்படைந்தார்கள்'' என்றும் வாசிக்கிறோம். அங்கே அந்தப் புஸ்தகங்கள் என்று குறிப்பிடப்பட்டிருப்பது தேவனுடைய வார்த்தைகள் அடங்கிய பல நூல்களின் தொகுப்பாகிய வேதாகமம் என்று தான் எடுத்துக் கொள்ள வேண்டும் அந்த புஸ்தகங்கள் ''பழைய ஏற்பாடு'' என்றும், ''புதிய ஏற்பாடு'' என்றும் பகுக்கப்பட்டிருக்கிறது. தேவனுடைய வார்த்தைகள் அடங்கிய அந்நூல்களில் எழுதப்பட்டுள்ள காரியங்களைக் குறித்து கீழ்வருமாறு சொல்லுகிறார்.

''இந்தப் புத்தகத்திலுள்ள தீர்க்கதரிசன வசனங்களைக் கேட்கிற யாவருக்கும் நான் சாட்சியாக எச்சரிக்கிறதாவது: ஒருவன் இவைகளோடே எதையாகிலும் கூட்டினால் இந்தப் புஸ்தகத்தில் எழுதியிருக்கிற வாதைகளை தேவன் அவன் மேல் கூட்டுவார்.

ஒருவன் இந்தத் தீர்க்கதரிசன புஸ்தகத்தின் வசனங்களிலிருந்து எதையாகிலும் எடுத்துப் போட்டால் ஜீவ புஸ்தகத்திலிருந்தும், பரிசுத்த நகரத்திலிருந்தும் அவனுடைய பங்கைத் தேவன் எடுத்துப் போடுவார் என்கிறார். (வெளி 22:18,19).

நாம் தேவனுடைய காரியங்களில் மிகவும் பயபக்தியாய் நடந்து கொள்ளவேண்டும். தேவனுடைய வசனத்தோடு ஒன்றைக் கூட்டுவதோ, ஒன்றைக் குறைப்பதோ கூடாது. அவைகள் யாவும் முழு உண்மையென்று ஏற்றுக் கொண்டு கீழ்ப்படிய வேண்டும். ஏனெனில் நாம் அவருடைய வார்த்தைகளுக்கு என்ன மதிப்புக் கொடுத்து செயல்பட்டோம் என்பதை வைத்துத் தான் நாம் நியாயம் தீர்க்கப்படுவோம். ''என்னைத் தள்ளி என் வார்த்தைகளை ஏற்றுக் கொள்ளாதவனை நியாயம் தீர்க்கிறது ஒன்று இருக்கிறது; நான் சொன்ன வசனமே அவனைக் கடைசி நாளில் நியாயம் தீர்க்கும்'' என்று இயேசுவே கூறியிருக்கிறார் (யோவான் 12:48)

அப்படியானால், கர்த்தர் சொன்ன வசனங்களை நாம் எங்கே காண முடியும்? வெளி 20:12ல் சொல்லப்பட்ட அந்த நூல்களில்தான் காணமுடியும். ஆக நியாயத் தீர்ப்பு நாளிலே அந்த நூல்களில் சொல்லியுள்ள வசனக்களின்படி நியாயம் தீர்க்கப்-

படுவோம். அதனால் தான் நாம் தேவனுடைய வார்த்தைகளை மிகவும் மதித்து நடந்து கொள்ள வேண்டும் என்று வலியுறுத்து-கிறோம். நியாயத் தீர்ப்பு என்னும் மாபெரும் முக்கிய நாளில் கர்த்தரால் மெச்சிக் கொள்ளப்பட வேண்டுமானால் நாம் அந்த வசனங்கள் கூறுகிற காரியங்கள் என்னவென்று கவனித்து நம்முடைய வாழ்க்கையை நடத்த வேண்டும்.

வெளி 20-12ல் வேறொரு புத்தகத்தைப் பற்றிக் கூட குறிப்பிடப்பட்டிருக்கிறது. அது தான் ஜீவ புஸ்தகம். அந்தப் புத்தகத்தில் கர்த்தருக்குச் சொந்தமானவர்கள் இன்னார் என்றும், தேவனுக்குக் கீழ்ப்படியாதவர்கள் இன்னார் என்றும் ஒரு பெயர்ப் பட்டியல் இருக்கும். அந்த நூல் திறக்கப்படுவதின் நோக்கம் என்னவெனில், ஒருவனுடைய பெயர் அதில் எழுதப்பட்டிருக்கிறதா என்று கண்டு கொள்வதுதான். ஒருவனுடைய பெயர் அதில் காணப்படவில்லையென்றால் அவன் வேத எழுத்துக்களின் பிரகாரம் இரட்சிக்கப் படவில்லை. ஆகவே அவன் பரலோகம் செல்ல முடியாது.

கர்த்தர் நிஜமாகவே அப்படியொரு புஸ்தகத்தில் தமக்குச் சொந்தமானவர்கள் ஒவ்வொருவருடைய பெயரையும் எழுதி வைத்திருப்பாரா என்று ஒருவேளை யோசிக்கலாம். இங்கே கர்த்தருடைய வார்த்தைகள் காகிதத்தில் மை கொண்டு எழுதப் பட்டு புத்தக வடிவில் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதே முறை பரலோகத்திலும் இருக்கும் என்று எண்ணலாகாது. அது உருவகமாகச் சொல்லப்பட்டதேயன்றி நிஜமான ஒரு நூல் அல்ல. இரட்சிக்கப்பட்டுக் கர்த்தரைச் சந்திக்கப் பரலோகம் போகும் அனைவருடைய பெயரையும் கர்த்தர் ஞாபகத்தில் வைத்திருப்பார்.

அதாவது கர்த்தருக்குச் சொந்தமானவர்கள் யார் என்பது பெயர் முதலாய் அவருக்கு மனப்பாடமாகத்தெரியும். அதைத்தான் ஜீவ புஸ்தகத்தில் எழுதியிருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதே போன்று கருத்துத் தொனிக்கும்படி அப் 2:47ல் **''இரட்சிக்கப்பட்டவர்களை தேவன் சபையில் சேர்த்துக் கொண்டு வந்தார்''** என்று கூறப்பட்டிருப்பதைக் கவனியுங்கள்.

அதாவது ஒருவன் கிறிஸ்துவின் உபதேசத்துக்குக் கீழ்ப்படிந்தால் அவனையும், அவனுடைய விசுவாசத்தையும் ஏற்றுக் கொண்டு தேவனுடைய குடும்பமாகிய சபையில் அவனைச் சேர்த்துக் கொள்ளுகிறார். இவ்விதமாய் அவனுடைய பெயர் ஜீவ புஸ்தகத்தில் எழுதப்படுகிறது. கர்த்தர் எல்லாரையுமே சபையில் சேர்த்-

துக் கொள்வதில்லை. தம்முடைய பிதாவின் சித்தத்தின்படி சுவி-சேஷத்துக்குக் கீழ்ப்படிந்தவனையே சேர்த்துக் கொள்கிறுர். ஆகவே அப்படிப்பட்ட நபரை தம்முடையவர்களில் ஒருவராய்ப் பாவித்து நினைவில் வைத்துக் கொள்கிறார்.

புதிய எருசலேம் என்று அழைக்கப்படும் பரம நகரத்தைக் குறித்துச் சொல்லும் போது, ''தீயவர்களும், அக்கிரமக் காரர்-களும், தேவபயமற்றவர்களும், பாவிகளும் அந்தப் புனிதமான நகரத்துக்குள் பிரவேசிக்க முடியாது'' என்கிறார், ஆட்டுக் குட்டி-யானவரின் ஜீவ புஸ்தகத்தில் எழுதப்பட்டிருப்பவர்களே அதற்குள் பிரவேசிக்க முடியும் என்று சொல்லப்பட்டிருக்கிறது (வெளி 21:27) மேலும், ''ஜீவ புஸ்தகத்தில் எழுதப்பட்டவனாகக் காணப்படா-தவன் எவனோ அவன் அக்கினிக் கடலிலே தள்ளப்பட்டான்'' என்றும் கூறப்பட்டிருக்கிறது (வெளி 20:15)

அப்போஸ்தலனாகிய பவுல் பிலிப்புப் பட்டணத்து சபை-யாருக்கு எழுதும்போது ''ஆதலால் எனக்குப் பிரியமும் வாஞ்சையு-மான சகோதரரே, எனக்குச் சந்தோஷமும் கிரீடமுமானவர்களே, பிரியமானவர்களே, இந்தப்படியே கர்த்தருக்குள் நிலைத்திருங்கள்.

கர்த்தருக்குள் ஒரே சிந்தையாயிருக்க எயோதியாளுக்கும் சிந்திக்கேயாளுக்கும் புத்தி சொல்லுகிறேன்.

''அன்றியும் என் உத்தமக் கூட்டாளியே, அவர்களுக்கு உதவியாக இருக்கும்படி உன்னையும் வேண்டிக் கொள்ளுகிறேன் அவர்கள் கிலமந்தோடும் மற்ற என் உடன் வேலையாட்களோடும் கூட சுவிசேஷ விஷயத்தில் என்னோடே கூட மிகவும் பிரயாசப் பட்டவர்கள். அவர்களுடைய நாமங்கள் ஜீவ புஸ்தகத்தில் இருக்-கிறது'' (பிலி 4:1:3) இங்கே பவுல் யாரைக்குறித்துப் பேசுகிறார்? அவர்களுடைய பெயர்கள் ஜீவபுஸ்தகத்தில் இருக்கிறது என்று எப்படித் தெரியும்? அவர் தேவ ஆவியால் ஏவப்பட்டு எழுதினார் என்பது உண்மைதான். அது அல்லாமல் கர்த்தருடைய உபதேசத்-துக்குக் கீழ்ப்படிந்தபடியினால் இரட்சிக்கப்பட்டவர்கள் கர்த்தரால் சபையில் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். என்றும் எஞ்சியுள்ள தங்கள் வாழ்நாட்களை உண்மையும் உத்தமுமாய் கழிக்கிறவர்-களுடைய பெயர்கள் நிச்சயமாக ஜீவ புஸ்தகத்தில் எழுதப் பட்டி-ருக்கும் என்றும் வேதாகமம் சொல்லுகிறபடியாலும் அவர் அவ்வ-ளவு நிச்சயமாய்ச் சொல்ல முடிந்தது.

அப்படியானால் ஜீவ புஸ்தகத்தில் பேரெழுதப்பட்ட ஒருவன் மீண்டும் பாவத்துக்குள் வீழ்ந்து இரட்சிப்பை இழந்து போவானா-னால் அவருடைய நிலைமை என்ன? அவருடைய பெயர் ஜீவ

புஸ்தகத்தில் இருந்து எடுபட்டுப் போகுமா? இதற்குப் பதில் வேதாகமத்தில் இல்லாமல் இல்லை.

நியாயப்பிரமாணத்தைப் பெற்றுக்கொள்ளும்படியாக மோசே மலைக்கு ஏறிச் சென்றிருந்த சமயம் ஆரோனுடைய உதவியுடன் இஸ்ரவேலர்கள் ஒரு பொன் கன்றுக்குட்டியை தெய்வமாகச் சிருஷ்டித்து வணங்கி ஆடிப்பாடி மகிழ்ந்தார்கள். மோசே திரும்பி வந்த பொழுது அவர்கள் செய்த காரியத்தைக் கேள்விப்பட்டு வெகுண்டெழுந்தான் லேவி புத்திரர்களை ஏவி அன்றைய தினம் சுமார் மூவாயிரம் பேர்களைக் கொன்று குவித்தான். அதற்குப் பிறகு நாம் வாசிக்கிறதென்ன? ''மறு நாளிலே மோசே ஜனங்களை நோக்கி நீங்கள் மகாப் பெரிய பாவஞ் செய்தீர்கள்; உங்களுக்காக பாவ நிவர்த்தி செய்யக் கூடுமோ என்று அறிய இப்பொழுது நான் கர்த்தரிடத்திற்கு ஏறிப் போகிறேன்'' என்று கிளம்பினார்.

அப்படியே மோசே கர்த்தரிடத்திற்குத் திரும்பிப் போய்: ''ஐயோ இந்த ஜனங்கள் பொன்னினால் தங்களுக்குத் தெய்வங்களை உண்டாக்கி, மகாப் பெரிய பாவம் செய்திருக்கிறார்கள்.

''ஆகிலும் தேவரீர் அவர்கள் பாவத்தை மன்னித்தருளுவீரானால் மன்னித்தருளும்; இல்லாவிட்டால் நீர் எழுதின உம்முடைய புஸ்தகத்திலிருந்து என் பேரைக் கிருக்கிப் போடும் என்றான்.

''அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி எனக்கு விரோதமாய்ப் பாவம் செய்தவன் எவனோ அவன் பேரை என் புஸ்தகத்திலிருந்து கிறுக்கிக் போடுவேன்.''

''இப்பொழுது நீ போய், நான் உனக்குச் சொன்ன இடத்துக்கு ஜனங்களை அழைத்துக் கொண்டு போ. என் தூதனானவன் உனக்கு முன் செல்வார், ஆகிலும் நான் விசாரிக்கும் நாளில் அவர்களுடைய பாவத்தை அவர்களிடத்தில் விசாரிப்பேன்" என்றார்.

''ஆரோன் செய்த கன்றுக்குட்டியை ஜனங்கள் செய்வித்ததினிமித்தம் கர்த்தர் அவர்களை உபாதித்தார்.'' (யாத் 32:30-35)

ஆம் சகோதரர்களே, கர்த்தர் ஒருவனுடைய பெயரை ஜீவ புஸ்தகத்திலிருந்து கிறுக்கிப் போட முடியும் அவருக்கு எழுத முடியுமானால் கிறுக்கிப் போடவும் முடியுமே. மேலும் ஒருவனுடைய பெயர் கிறுக்கப்படுகிறது என்றால் என்ன பொருள்? கர்த்தருடைய பார்வையில் அவனுக்கு இரக்கம் கிடைக்கவில்லை என்பது தானே? அவன் இரட்சிக்கப்பட்ட நிலையிலிருந்து வழுவிப் போனான் அந்த நிலையில் அவன் மரிப்பானானால் அக்கினிக்

கடலிலே தள்ளப்படுவான். ஏனெனில் அவனுடைய பெயர் ஜீவ புஸ்தகத்தில் இருந்து நீக்கப்பட்டு விட்டது. (வெளி 20:15)

ஒருவனுடைய பெயர் ஜீவ புஸ்தகத்திலிருந்து நீக்கப்பட்டு விட்டால், அவன் சகோதரர்களிடத்திலும் கர்த்தரிடத்திலும் தன் பாவத்துக்காக மெய் மனஸ்தாபப்பட்டு மன்னிப்புக் கேட்டுக் கொண்டால் அவனுடைய பெயர் மீண்டும் எழுதப்பட வாய்ப் புண்டு (யாக் 5:16).

ஆனால் கர்த்தர் இத்தனை காரியங்களையும் எப்படிக் கணக்கு வைத்திருப்பார்? இது பலருடைய கேள்வியும் சந்தேகமும். தேவனுக்கு எந்தக் காரியமும் கடினமல்ல அவருக்கு எல்லாமே சாத்தியம் உலகிலுள்ள ஒரு ஆத்துமாவும் அவருடைய பார்வைக்குத் தப்ப முடியாது. ஒரு ஆத்துமா அவருடைய உபதேசத்துக்குக் கீழ்ப்படிந்தால் அவரே அப்படிப்பட்ட ஆத்துமாவை இரட்சித்து சபையில் சேர்த்துக் கொள்கிறார். (மாற்கு 16:16; அப் 2:38; அப் 2:41) அதே நேரத்தில் அவனுடைய பெயர் ஜீவ புஸ்தகத்திலும் எழுதப்பட்டு இரட்சிக்கப்பட்டவர்களின் பட்டியலில் இடம் பெறுகிறது.

அதெல்லாம் சரி, ஆனால் கர்த்தர் அப்படிச் செய்கிறார் என்று எப்படி அவ்வளவு திட்டமாகச் சொல்லமுடியும்? ஒருவனுக்குத் தான் இரட்சிக்கப்பட்டிருப்பதும், மரித்தால் பரலோகம் சேர்வோம் என்று எப்படித் தெரியும்? இது மிகவும் சுலபம். இவைகளையெல்லாம் பெற்றுக் கொள்வதற்கு ஒருவன் என்ன செய்ய வேண்டும் என்று வேதம் கூறுகிறதோ அவைகளையெல்லாம் முறையாகச் செய்தால் அவர் தம்முடைய வாக்குறுதியின்படி நித்திய ஜீவனை நமக்குத் தருவார் என்று விசுவாசிக்க வேண்டும். ஏனெனில் அவர் பொய்யுரையாத தேவன் (தீத்து 1:3; எண் 23:19; I சாமு 15:29)

இறுதியாக நியாயத் தீர்ப்பு நாளில் அவர் நம் ஒவ்வொருவரையும் நினைவில் வைத்துக் கொண்டிருப்பதோடு நம்முடைய செயல்பாடுகள் அனைத்தையும் நம்முடைய நினைவுகளையும் ஞாபகத்தில் வைத்துக் கொண்டிருப்பார். ''ஏனென்றால் சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது, தீமைக்காவது தக்க பலனை அடையும்படிக்கு நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்துக்கு முன்பாக வெளிப்பட வேண்டும்'' என்று அப்போஸ்தலன் பவுல் கூறியிருக்கிறார் (2 கொரி 5:10) இயேசு கிறிஸ்துவும் ''மனுஷர் பேசும் வீணான வார்த்தைகள் யாவையும் குறித்து நியாயத் தீர்ப்பு நாளிலே கணக்கொப்புவிக்க வேண்டுமென்று உங்-

களுக்குச் சொல்லுகிறேன்'' என்று சொல்லியிருக்கிறார் (மத் 12:36) எபிரேய நிருப ஆசிரியர் ''அவருடைய பார்வைக்கு மறைவான சிருஷ்டி ஒன்றுமில்லை. சகலமும் அவருடைய கண்களுக்கு முன்பாக நிர்வாணமாயும், வெளியரங்கமாயும் இருக்கிறது. அவருக்கே நாம் கணக்கு ஒப்புவிக்க வேண்டும்'' என்கிறார் (எபி 4:13)

இவைகளெல்லாம் கூறுகிற உண்மை என்ன? நியாயத்தீர்ப்பு நாளில் அவருடைய வசனத்தைக் கொண்டு, நம்முடைய வாழ்க்கையில் செய்த நன்மை தீமைக்குத் தக்கதாக அவர் நம்மை நியாயந் தீர்க்கையில், நாம் எதையும் மறைக்க முடியாது. அவருக்கு முன்பாக எல்லாம் உள்ளது உள்ளபடியே காணப்படும். நம்முடைய பாவங்கள் எல்லாம் மன்னிக்கப்பட்டு நம்முடைய பெயர் ஜீவ புஸ்தகத்தில் எழுதப்பட்டிருக்குமானால் நமக்குப் பரலோகத்தில் இடம் ஒதுக்கப்படும். நம்முடைய வாழ்க்கையில் இன்னும் பாவம் இருக்குமானால் நம்முடைய பெயர்கள் ஜீவ புஸ்தகத்தில் காணப்பட மாட்டாது. நாம் அக்கினிக் கடலிலே தள்ளப்படுவோம்.

இவைகளையெல்லாம் அறிந்து கொண்டபிறகு, நம்மை நாமே கேட்டுச் சிந்திக்க வேண்டிய கேள்வி நம்முடைய பெயர்கள் ஜீவ புஸ்தகத்தில் எழுதப்பட்டிருக்கிறதா? அப்படி நம்முடைய பெயர் இல்லாவிட்டால் நிச்சயமாய் நாம் இரட்சிப்பை இழந்து போனவர்களே.

நண்பர்களே! நாம் புத்திசாலிகளாக இருந்தால் இப்பொழுதே நம்முடைய பெயர் ஜீவ புஸ்தகத்தில் எழுதப்பட்டிருக்கிறதா? என்று உறுதி செய்து கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் நாம் ஆக்கினைக்குத் தப்பமுடியாது.

J C. சோட்

**இது என் கருத்தல்ல; பரிசுத்த ஆவியானவரின் வார்த்தைகள்.**

யாராவது அந்நிய பாஷையிலே பேசுகிறதுண்டானால் அது இரண்டு பேர் மட்டில் அல்லது மிஞ்சினால் மூன்று பேர் மட்டில் அடங்கவும், அவர்கள் ஒவ்வொருவராய்ப் பேசவும், ஒருவன் அர்த்தத்தைச் சொல்லவும் வேண்டும்.

1 கொரி 14: 26

# நல்ல மாமியார்

உலகெங்கிலும் மாமியார்மார்களைப் பற்றிக் கேலி நிறைந்த வேடிக்கைப் பேச்சுகள் பேசப்படுவதுண்டு. அவைகளில் பல உண்மைக்கு மாறானவைகளாகவும், மிகைப்படுத்தப்பட்டவைகளுமாகவே இருக்கும். ''நெருப்பில்லாமல் புகையில்லை'' என்பது போல அவைகளை முழுவதும் உண்மையல்ல என்று புறக்கணித்து விடவும் முடியாது. இந்தக் கேலிப் பேச்சுகள் பரவலாக எல்லா நாடுகளிலும், எல்லா இன மக்களிடையேயும் நிலவுவதால் நிச்சயமாக சில மாமியார்களின் நடவடிக்கைகளாவது அப்படிப்பட்ட கேலிப் பேச்சுகளுக்குக் காரணமாயிருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

பெற்றோர்களுக்கு, குறிப்பாக தாய்மார்களுக்கு வளர்ந்து வரும் குழந்தைகளைப் பற்றி அவ்வப்பொழுது சில பிரச்சனைகள் தோன்றுவதுண்டு. அவர்கள் வளர வளர அவர்களுடைய பாச உணர்வுகள், அன்பு ஆகியவைகள் திசை மாறும் அல்லது குறைந்து வரும் என்று அநேகமாக எல்லாப் பெற்றோர்களுக்கும் தெரிந்திருந்த போதிலும் அதை ஏற்றுக் கொள்ளக் கூடிய மனப் பக்குவம் இன்றித் தடுமாறுவார்.

இது குறிப்பாக தங்களுடைய ஆண்மக்கள் திருமணமாகி ஒரு மனைவியைக் கொண்டு வந்த பிறகோ அல்லது அவர்கள் தனிக்குடித்தனம் அமைத்துக் கொண்டு போய் விட்ட பிறகோ ஆணைப் பெற்ற தாய்மார்கள் சூழ்நிலை மாற்றத்தைத் தாங்கிக் கொள்ள முடியாமல் மெத்தவே கஷ்டப்படுவர்.

ஒரு காலத்தில் தன்னையே சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருந்த மகன் திருமணம் ஆனதும் மனைவி பக்கம் சாய்ந்து கொண்டு தன்னைப் புறக்கணிக்கிறானே என்று வேதனைப்படுவாள். அது பொறாமையாக வளர்ந்து கசப்புணர்வுகளாகப் பூத்து பகையாகக் காய்க்கும் பின்னர் அது வெடித்து குடும்பத்தில் சமாதானக் குறைவையும், கணவன் மனைவிக்குள் அபிப்பிராய பேதங்களையும், குடும்ப அங்கத்தினர்களுக்குள் விரோதங்களையும் உண்டாக்கும். சில மாமியார்கள் இதை மனதில் வைத்துக் கொண்டு புதுமருமகள் செய்கிற வீட்டு வேலைகளிலும், சமையலிலும் ''அது தொச்சம், ''இது சொள்ளை'' என்று சதா குற்றம் கண்டு பிடித்துப் புகார் பட்டியல் தயார் செய்வாள். மருமகளை சம்பளமில்லாத வேலைக்காரி என்று நினைத்துக் கொண்டு தேவையில்லாத ''கெடுபிடி'' பண்ணுவாள்.

ஆரம்பத்தில் கொஞ்ச நாள் அதைப் பொறுத்துக் கொண்டாலும், நாளாக ஆக மருமகளும் தன் அதிருப்தியையும், வெறுப்பையும் காட்டுவாள்; பகைமை முற்றும்.

நாட்டு நடப்புகள் மேற்சொன்னபடி இருந்தாலும் ஒரு கிறிஸ்தவ மாமியார் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதைக் குறித்து வேதாகமம் மௌனமாக இல்லை. எல்லாவற்றிலும் கிறிஸ்துவின் உபதேசத்தில் நன்கு பழக்கப்பட்ட மாமியார் ''மனுஷர் உங்களுக்கு எப்படிச் செய்ய வேண்டும் என்று விரும்புகிறீர்களோ அப்படியே நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்'' (லூக் 6:31) என்று சொல்லப்பட்டிருப்பதை மனதில் நினைத்துக் கொண்டு ஞானமாய் செயல்பட வேண்டும். வேதாகமம் சொல்லுகிற அறிவுரையின்படி மாமியார்கள் செயல்படத் தொடங்கினால் குடும்பங்களிலும், சமுதாயங்களிலும் பெருகி வரும் பல பிரச்னைகள் சுமுகமாய்த் தீர்க்கப்பட்டு விடும். தானும் ஒரு காலத்தில் மருமகளாயிருந்தவள் தானே! என்று எண்ணிப் பார்த்தால் பிரச்னைகள் தோன்றுவதற்கே வாய்ப்பில்லை. அப்படியே தோன்றினாலும் அதை முளையிலேயே கிள்ளி எறிந்து விட முடியும். எந்த மாமியார் தான், தான் மருமகளாயிருந்த பொழுது துன்புறுத்தப்படுத்துவதை விரும்பியிருப்பாள்? அல்லது எந்தத் தாய் தான் தன் மகள் மருமகளாய்ப் போயிருக்கிற இடத்தில் மாமியாரால் கொடுமைப்படுத்தப்பட்டால் சகித்துக் கொண்டு பொறுமையாயிருப்பாள்? நிச்சயமாக எந்த ஒரு பெண்ணும் தானோ அல்லது தான் பெற்றெடுத்த மகளோ கொடுமைப் படுத்தப்படுவதைக் கண்டு சகித்துக் கொண்டிருக்க மாட்டாள். ஆகவே ஒரு நல்ல கிறிஸ்தவ மாமியாரும் தனக்கு மருமகளாக வந்த பெண்ணைக் கொடுமைப் படுத்தக்கூடாது.

ஒரு மாமியார் திருமண விஷயத்தில் தேவனுடைய திட்டத்தையும், ஒழுங்கையும் சரியாகப் புரிந்து கொண்டிருப்பாளானால் திருமணத்துக்குப் பிறகு தன்னுடைய மகனுடைய அன்புக்காகத் தன் மருமகளோடு போட்டி போட மாட்டாள். அன்பிலே பலவகை உண்டு என்றும், மகன் தாய்க்குக் காட்ட வேண்டிய அன்புக்கும், தாரத்திடம் காட்ட வேண்டிய அன்புக்கும் உள்ள வித்தியாசத்தைப் புரிந்து வைத்திருப்பாள். ஒருவனுடைய வாழ்க்கையில் பருவத்துக் கேற்ப அன்பு மாற்றம் பெறுகிறது என்பதை உணர்ந்து கொண்டால் போட்டா போட்டி உணர்வுக்கு இடமே இல்லை.

தேவனுடைய திட்டத்தின்படி கணவனும் மனைவியும் ஒரே சரீரமாகி, சிந்தனையிலும் நோக்கத்திலும் ஒன்றிப் போகிறார்கள். ஒரு தாய் தன்னுடைய மகனை உண்மையாகவே நேசித்தால்

கணவனும் மனைவியும் ஒரே சரீரம் என்பதை ஏற்றுக் கொண்டு தன் மகனை நேசிப்பதைப் போலவே அவன் மனைவியையும் நேசித்து அன்பு கூருவாள். தன் மருமகளைக் கேவலமாக நடத்தினாலோ அல்லது கொடுமைப் படுத்தினாலோ அது அவள் தான் நேசிக்கிற மகனின் வாழ்க்கையை மறைமுகமாக பாதிக்கும் என்று உணர்வாள். தான் நேசிக்கிற மகனின் ஒரு பகுதியாயிருக்கிற மருமகளையும் சேர்த்து அரவணைத்து அன்பு பாராட்டா விட்டால் பிரச்னை வந்தே தீரும். அப்புறம் தாய்க்கும் மகனுக்கும் உள்ள அன்பில் விரிசல் ஏற்படாமல் எப்படி இருக்க முடியும்?

''பிரியமானவர்களே, ஒருவரிலொருவர் அன்பாயிருக்கக் கள்வோம். ஏனெனில் அன்பு தேவனால் உண்டாயிருக்கிறது'' (1யோவான் 4:7) என்றும், என் பிள்ளைகளே, வசனத்தினாலும், நாவினாலும் அல்ல; கிரியையினாலும், உண்மையினாலும் அன்பு கூரக்கடவோம்,'' (1யோவான் 3:18) என்றும் சொல்லப்பட்டிருக்கிற தேவ நீதியை அறிந்த எந்தக் கிறிஸ்தவ மாமியாரும் தான் பெற்று வளர்த்த அருமை மகனை நேசிக்கிறார் போல தன் மகனுக்குக் கொண்டு வந்த மருமகளையும் நேசிக்கக் கடவள்''.

**பெட்டி பர்ட்டன் சோட்**

---

## மனைவியரின் அகஅழகும் புறஅழகும்

மனைவிகளே! உங்கள் சொந்தப் புருஷர்களுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்; அப்பொழுது, அவர்களில் யாராவது திருவசனத்துக்குக் 'கீழ்ப்படியாதவர்களாயிருந்தால், பய பக்தியோடு கூடிய உங்கள் கற்புள்ள நடக்கையை அவர்கள் பார்த்து,

போதனையின்றி, மனைவிகளின் நடக்கையினாலேயே ஆதாயப் படுத்திக் கொள்ளப்படுவார்கள்.

மயிரைப் பின்னி, பொன்னாபரணங்களை அணிந்து, உயர்ந்த வஸ்திரங்களை உடுத்திக் கொள்ளுதலாகிய புறம்பான அலங்கரிப்பு உங்களுக்கு அலங்காரமாயிராமல்.

அழியாத அலங்கரிப்பாயிருக்கிற சாந்தமும் அமைத்தலுமுள்ள ஆவியாகிய இருதயத்தில் மறைந்திருக்கிற குணமே உங்களுக்கு அலங்காரமாயிருக்கக் கடவது. அதுவே தேவனுடைய பார்வையில் விலையேறப் பெற்றது.

இப்படியே பூர்வத்தில் தேவனிடத்தில் நம்பிக்கையாயிருந்த பரிசுத்த ஸ்திரீகளும் தங்களுடைய புருஷர்களுக்குக் கீழ்ப்படிந்து தங்களை அலங்கரித்தார்கள்.

1பேதுரு 3:1—5.

# பழக்க வழக்கங்கள்

''அந்த மனிதனுடைய பழக்கம் அது'' என யாரைப்பற்றியாகிலும் கூறக்கேட்டால், உடனே பல கெட்ட சங்கதிகளுடன் நாம் அவரை இணைத்துப் பார்க்கிறோம். நிறைய கெட்ட பழக்கங்கள் மனிதனிடம் உள்ளன என்பதில் சந்தேகமில்லை. என்றாலும் பழக்கம் என்று சொன்னாலே அது தவறான செயலைத் தான் குறிக்க வேண்டும் என்பதில்லை.

பழக்கம் என்ற சொல்லுக்கு, ''கட்டாயத் தேவை, அல்லது ஒரு காரியத்திற்கு அடிமையாகிப்போதல்'' என்ற அர்த்தங்களை அகராதி கூறுகிறது. அபின், கஞ்சா போன்ற போதைப் பொருட்களுக்கு அடிமையாகி போனோர் அவற்றைப் பெற்றிட எந்த விலையும் தரத் தயாராக இருப்பர். இது கெட்ட பழக்கம்.

பழக்கம் என்பது ஒரு குறிப்பிட்ட வழக்கம் அல்லது நடைமுறை செயலாகவும் இருக்கும். உதாரணமாக, பிறந்தநாளுக்கு பரிசுகள் வழங்குவதைக் கூறலாம். நட்பை வெளிபடுத்தும் இச் செயல் ஒரு நல்லப் பழக்கம்.

காலாகாலமாக நம்மைத் தொற்றிக் கொண்டு தொடரும் ஒரு செயலை பழக்கம் என்கிறோம். நமது அன்றாட வாழ்க்கையில் நாம் செய்யும் காரியங்கள் பல பழக்கத்தின் காரணமாக நம்மைப் பற்றிக் கொண்டவைகளாகும்.

மக்கள் தொடர்ந்து நல் வளர்ச்சியிலும் பக்குவமடைவதிலும் கிறிஸ்தவம் உதவுகிறது. வேத வசனங்கள் நம்மை நல் வழிப்படுத்துகின்றன. நல்ல பழக்கங்களை கடைபிடிக்கத் தேவைப்படும் சகல முயற்சிகளையும் நாம் மேற்கொண்டால், நற்கிரிகைகளால் பூரணப்பட்ட கிறிஸ்துவை பின்பற்றும் பக்குவத்தை அடைகிறோம். அதே சமயம், பயனற்ற பழக்கங்களினின்று நாம் விடுபட்டு, தேவனுடைய பிள்ளைகளாக வளர்ந்து அவருக்கும் மக்களுக்கும் சேவை செய்யும் நற்பண்புகளைப் பெற நாம் கடினமாக உழைக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

## நல்ல பழக்கங்கள்

1. கிறிஸ்தவக் குடும்பம் வேதாகமத்தை அடித்தளமாகக் கொண்டு கட்டப்படுகிறது. நமது வாழ்க்கை எவ்வாறு அமைய வேண்டுமென தேவன் விரும்புகிறார் என அறிய வேதாகமத்தைப் படிப்பதை தவிர வேறு வழியில்லை. முதலாம் சங்கீதத்தின் ஆரம்பத்தில் குறிப்பிட்ட அந்த பண்புள்ள மனிதனின் மகிழ்ச்-

சிக்குக் காரணம் 'கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருந்ததே.

2. வேதாகமப் படிப்பின் தொடர்ச்சியே ஜெபம் செய்வதாகும். சுவிசேஷத்தின் மூலமாக தேவன் நம்மோடு பேசுகிறார். ஜெபத்தின் வழியாக நமது இருதயங்களை அவருக்குத் திறந்து காட்டுகிறோம். பண்புள்ள மக்களின் ஜெபங்களை தேவன் விரும்பிக் கேட்கிறார், என வேதாகமம் கூறுகிறது. ஜெபத்தின் மூலம் அவரை தொடர்பு கொள்ளவும், நமது பாவங்களை அவரிடம் அறிக்கையிடவும், நமது பாரங்களையெல்லாம் அவர் பேரில் சுமத்தவும் தேவன் நம் மிடம் எதிர்பார்க்கிறார். பணிவான குணம், ஆன்மீக வளர்ச்சி புதிய தெம்புடன் உலகை நோக்கும் வலிமை, சோதனைகளை மேற்கொள்ளும் பலம், இவை யாவும் தொடர்ந்து ஜெபம் செய்யும் பழக்கம் நமக்கு அளிக்கவல்லதாயிருக்கிறது.

3. ஆராதனைகளில் தவறாமல் கலந்து கொள்வது தேவனுடைய பிள்ளைகளிடம் இருக்க வேண்டிய வாஞ்சை மிக்க ஒரு பழக்கமாகும். ஆராதனைக்குப் போவதா, வேண்டாமா என்ற விவாக்தமே நம்மிடம் எழக்கூடாது. ''வேதாகமப் படிப்பிலும் ஆராதனைகளிலும் கலந்து கொள்ள வேண்டியது நமது கடமைதான்; ஊழியரும் நம்மை எதிர்ப்பார்ப்பார்; எனவே அங்கு செல்ல முயற்சிப்போம்'' என்ற ஆர்வமற்ற கண்ணோட்டம் தவறு. வேதாகமப் படிப்பும், ஆராதனையும் ஒவ்வொரு வாரமும் நமக்குக் கிடைக்கப் பெற்ற பெரிய ஆசீர்வாதம் எனக்கருதி, அளவற்ற ஆர்வத்துடன் அவைகளில் பங்கு பெற வேண்டும். அவை நமக்கு மட்டற்ற மகிழ்ச்சி அளிக்கும் நேரங்கள். ஏனெனில் தேவன் நமக்கு செய்து வரும் பெரிய காரியங்களுக்காக அவரைத் துதிக்கவும் அவருடைய வல்லமைக்காக அவரை மகிமைப்படுத்தவும் சகலரும் சேர்ந்து பங்கு கொள்ளும் நல்ல தருணங்கள் அவை.

## கெட்ட பழக்கங்கள்

துர் அதிர்ஷ்டவசமாக இவை பற்றியும் நாம் பேச வேண்டியவர்களாக இருக்கிறோம். ஒரு கெட்ட பழக்கத்தை எவருமே பற்றிக் கொள்ள வேண்டுமென விரும்பி தீர்மானிப்பதில்லை. ஒரு சிறு வழுக்கல், படுகுழியில் நிரந்தரமாக வீழ்த்தி விடுவதையே பல தடவைகளில் நாம் காண்கிறோம். பழக்கங்கள் ஏற்படுவது கடினம்; ஆனால் அவை தொற்றிக் கொண்டு விட்டாலோ அவற்றிலிருந்து விடுபடுவது மிக மிகக் கடினம். குறிப்பாக கெட்ட பழக்கங்களிலிருந்து விடுபட்டு நாம் எல்லோருமே மேலும் நீதிமான்களாக மாற முடியும். அடுத்து வரும் குறிப்புகளைப் பற்றி தீவிரமாக சிந்தித்துப் பாருங்கள். அவை உங்கள் கிறிஸ்தவ வாழ்க்கையை சம்பந்தப்பட்டிருப்பதால், கெட்ட பழக்கங்களிலிருந்து விடுபட தேவைப்படும் திருத்தங்களை செய்ய உறுதி பூணுவீர்,

**1. வேதாகமப் படிப்பில் ஆர்வமற்ற தன்மை :** வேதாகமப்பாடங்களைப் படிக்கத் தவறுவது, வேண்டுமென்றே செய்யும் குற்றமல்ல; ஆனால் படிக்க போதிய நேரமில்லையே? இது உண்மையல்ல. வாரம் முழுவதும் இருக்கிறது, மெதுவாகப் படிக்கலாம் என காலங்கடத்திக் கொண்டே போய், கடைசியில் நேரமே கிடைக்காது போய் விடுகிறது என்பதே உண்மை. இது ஒரு கெட்ட பழக்கம். தேர்வு ஆரம்பிக்க ஐந்து நிமிடங்கள் இருக்கையில் அவசர அவசரமாக கேள்விகளுக்குப் பதில் எழுதிக் காட்டி, மதிப்பெண்களைப் பெற்று விடலாம். இவ்விதப் படிப்பால் வேறு பயன் எதுவுமில்லை. கொடுக்கப்பட்ட பாடங்களைப் படித்து விடைகள் எழுத, வாரத்தில் ஒருநாள் குறிப்பிட்ட நேரத்தை ஒதுக்குங்கள். அதே போன்று சத்திய வசனங்களைத் தியானிக்கவும் தினமும் நேரம் ஒதுக்கப் படவேண்டும்.

**2, வேதாகம வகுப்பிற்கு அடிக்கடி மட்டம் போடுதல் ;** பாடங்களையும் படிக்காமல் வினாக்களுக்கு விடைகளும் எழுதாமல் வகுப்பிற்குச் சென்று என்ன பயன்? இம்முறை கேட்டுக்கு சப்பைக் கட்டாக பல சாக்கு போக்குகள் நம்மிடம் தயாராக உள்ளன. பாடங்களுக்கு முக்கியத்துவம் அளிப்பதில்லை என்பதே உண்மையான காரணமாக இருக்கிறது. இது ஒரு கெட்ட பழக்கம் மட்டுமல்ல, நமது ஆன்மீக அழிவிற்குரிய ஒரு பயங்கர நிலையுமாகும்.

**3. தாமதம் என்னும் சோம்பேறித்தனம் ;** இது முற்றிலுமாக, வேண்டுமென்றே செய்யப்படுவதல்ல. ஆனால் சரியான நேரத்தில் ஒரு காரியத்தைச் செய்யத் தவறுவது கெட்ட பழக்கம் சரியான நேரத்தில் தயாராவதில்லை, ஏனெனில் குறிப்பிட்ட நேரத்தில் படுக்கையைவிட்டு எழுந்திருப்பதில்லை. சரியான வேளையிலே படுக்கைக்குச் செல்லாததே அதற்கு காரணமாகிறது. இக்கெட்ட பழக்கங்கள் யாவும் சங்கிலித் தொடராக ஒன்றை ஒன்று பிணைத்துக் கொண்டு, நம்மை அறியாமலேயே ஒரு பெரும் பூதமாக உருவெடுத்து விடுகிறது. ஆராதனைக்கும், வேதாகம வகுப்பிற்கும் சரியான நேரத்தில் (ஆரம்பிக்கும் முன்னரே) செல்ல வேண்டிய நல்ல பழக்கத்தை கடைபிடிக்க வேண்டியது அத்தியாவசியமாகும்.

பழக்கங்கள் இவை நம் எல்லோரிடமும் உள்ளன. நல்ல பழக்கங்களுக்காக நாம் நன்றியுடையவர்களாயிருப்போம். ஒருவருக்கொருவர் உற்சாகப்படுத்தி நல்ல பழக்கங்களை வளர்த்துக் கொள்வோம். அதே சமயம், கெட்ட பழக்கங்களை கைவிடும் பணியில் அன்புடனும் பொறுமையுடனும் ஒருவருக்கொருவர் உதவி செய்வோம். தேவனும் உதவி செய்யும்படி மன்றாடுவோம்.

**S.S. ராஜன்**

# கிருபை என்றால் என்ன?

வேதாகமத்தில் காணப்படும் இந்த அருமையான சொல்லின் பொருளைத் துல்லியமாக விளங்கிக் கொள்ள முடியாதபடி அதன் பொருளைக் குழப்பி வைத்திருக்கிறார்கள். ஆகவே அந்தக் கருத் தாழம் மிக்கச் சொல்லின் பொருளைத் தெளிவாக புரிந்துகொள் வதற்கு அதன் மீதே படிந்து கிடக்கிற தப்பு அர்த்தங்கள் என்ற தூசு துப்பையெல்லாம் தட்டித் துடைத்து அப்புறப்படுத்தி விட்டு அதன் உண்மையான பொருளை புரிந்து கொள்ள முயற்சிப்போம்.

தேவனுடைய அநந்த ஞானத்தினால் கொடுக்கபட்ட சொற்களின் மெய்ப் பொருள் என்ன என்பதைப் பற்றிக் கொஞ் மும் கவலைப்படாமல் தங்களுக்குத் தோன்றியபடி எல்லாம் ஆளுக் கொருவிதமாய் அர்த்தம் சொல்லுகிறார்கள். ''அறியாமையே ஆசிர் வாதம்'' என்னும் முதுமொழிக்கேற்ப தங்களுடைய மாமிசத்திற்-கும் மனசுக்கும் பிரியமானவைகளைத் தேடிக் கண்டுபிடித்து அவை களை மட்டுமே உபதேசித்து, தங்களுக்கென்று ஒரு கொள்கையை வகுத்துக் கொண்டு, தங்கள் கூடாரத்துக்குள் நுழைகிறவர்களை வளைத்து பிடித்து வைத்துக் கொண்டு வெளியில் பெய்கிற மன்னா வைச் சேகரித்து பயனடையாமல் தடுத்து நிறுத்தி 'மூளைச்சலவை' செய்து வருகிறார்கள். தேவன் என்ன சொல்லியிருக்கிறார் என்ப தெல்லாம் அவர்களுக்கு இரண்டாம் பட்சம். யோவான் ஸ்நானகன் ''நான் சிறுகவும் அவர் பெருகவும் வேண்டும்'' என்று கூறி தன்னைத் தாழ்த்தி கர்த்தரை உயர்த்திக் காட்டினான். ஆனால் இவர்களோ தாங்கள் வளமுடன் வாழவேண்டும் கர்த்தர் என்ன ஆனால் நமக்கு என்ன என்று சொல்லாமல் செயல் பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

கிருபையைப் பெற்றுக் கொள்வதற்கு தேவன் சில நிபந்தனைகளைச் சொல்லியிருக்கிறார் என்பது உண்மையே. ஆனால் பெரும்பாலோர் அதை விட்டு விட்டு எதை எதையோ போதித்துக் கொண்டிருக்கிறார்கள். முதலாம் நூற்றாண்டில் சில பேர் எழும்பி ''விருத்த சேதனம் செய்து கொண்ட பிறகே இரட்சிப்பு சாத்தியம்'' என்ற ஒரு தவறான உபதேசத்தைச் செய்து வந்தார்கள். அதைக் குறித்து ஒரு தெளிவான போதனையை உருவாக்கும் நோக்கத்தோடு ஒரு கருத்தரங்கம் ஏற்பாடு செய்து விவாதித்து நல்ல முடிவு எடுத்ததாக நாம் வாசிக்கிறோம். (அப் 15 ம் அதிகாரம்) நாமும் கூட அவர்களுடைய நல்ல முன்மாதிரியைப் பின் பற்றி உபதேசங்களை முறைப்படுத்தினால் நன்றாக இருக்கும். தங்களுடைய இஷ்டம் போல் செயல்படுவதைத்

தேவன் ஏற்றுக் கொள்வதில்லை என்பதோடு மட்டுமில்லாமல் கடுமையாக எச்சரிப்பும் விடுகிறார்.(கலா 1-8-9; வெளி 22:18;19) ஆனாலும் கவனிப்பார் யாருமில்லை.

தேவன் கிருபை என்று சொல்லப்படுகிற இந்த அருமையான சொல்லுக்குரிய தகுதிகளை வரையறுத்துள்ளார், ஆனால் சிலர் இதற்குப் புதுப்புது வியாக்கியானம் சொல்லி இதன் அர்த்தத்தைக் கொச்சைப் படுத்துகிறார்கள். ''கிருபை பெருகும்படி பாவத்தில் நிலைத்திருக்கலாமா? என்று கேள்வி கேட்டு அதற்குக் கூடாது'' என்று பதில் அளிக்கிறார் பவுல் அப்போஸ்தலன். ஆனால் சிலர் ''ஆம்'' என்று தங்கள் தவறான போதகத்தை நியாயப் படுத்த முயற்சிக்கிறார்கள்.

மூல மொழியாகிய கிரேக்கத்தில் கிருபை என்ற சொல்லுக்கு (charis) ''சாரிஸ்'' என்ற சொல் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. அதற்குப் பொருத்தமான அர்த்தம் எபே 2:8-9ல் காணப்பட்டுள்ள படி, கொடுக்கிறவருடைய அன்புள்ள இதயத்தை இது வெளிப்படுத்துகிறது. பெற்றுக் கொள்பவர்களுக்கு தாங்கள் அருகதையற்றவர்களாக இருந்த பொழுது இந்த சிலாக்கியம் நமக்கு வழங்கப்பட்டது என்ற உணர்வு ஏற்பட வேண்டும் என்று கூறுகிறது. (ரோமர்5:8,10)

இந்த மாதிரி அரும் சொற்களின் பொருள்களைப் பற்றி பலவிதமான கருத்துக்கள் நிலவிக் குழப்பம் உண்டாவதால் அது என்ன இல்லை என்பதை விளங்கிக் கொண்டால் உண்மையான பொருள் என்னவாக இருக்கும் என்பதைப் பற்றி ஓர் தெளிவு உண்டாகி விடும். முயன்று பார்ப்போம்.

**கிருபை என்பது நியாயப் பிரமாணம் அல்ல.** கிருபை என்பது சில சட்டதிட்டங்களின் தொகுப்பு அல்ல. அவைகளைக் கடைப் பிடிக்கிறவர்களுக்கு சில வெகுமதிகள் கிடைக்கும் என்று கூறுவதும் சரியல்ல. இயேசு கிறிஸ்து ''அப்படியே நீங்களும் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவற்றையும் செய்த பின்பு, நாங்கள் அப்பிரயோஜனமான ஊழியர்கள் செய்ய வேண்டிய கடமையை மாத்திரம் செய்தோம் என்று சொல்லுங்கள் என்றார் (லூக் 17:10) கிருபையை ஒருவகைச் சட்டம் என்று நினைக்க ஆரம்பித்தாலே அதனுடைய சிறப்புத் தன்மை மறைந்து விடும். அப்போஸ்தலன் பவுல் ஒரு இடத்தில் அதை விளக்கி'' அது கிருபையினால் உண்டாயிருந்தால் கிரியைகளினாலே உண்டாயிராது. அப்படியல்ல வென்றால் கிருபையானது கிருபையல்லவே. அன்றியும் அது கிரியைகளினாலே உண்டாயிருந்தால் அது கிருபையாயிராது. அப்படி-

யல்லவென்றால் கிரியையானது கிரியையல்லவே (ரோமர் 11:6) சிலாக்கியத்தைச் சட்டமாக்க முயன்றால் அதன் உயிர்மடிந்து போகும். ஆகவே கிருபை என்பது சட்டமல்ல.

**கிருபை என்பது உரிமம் அல்ல.** தேவனிடத்தில் ஏராளமான கிருபை உண்டு. அவைகளையெல்லாம் மனுக்குலத்தின் மேல் பொழிந்தருள விரும்புகிறார். அதை நாம் பெரும் அளவில் பெற்றுக் கொள்ள வேண்டும் என்றால் நாம் ஏராளமான பாவங்களைத் தாராளமாய்ச் செய்யலாம் என்று எண்ணுவதும், வியாக்கியானம் பண்ணுவதும் பெருந்தவறு. அப்படிப்பட்ட சிந்தனை ஆரோக்கியமானதன்று. அப்போஸ்தலன் பவுல் இது குறித்து ரோமர் 6ம் அதிகாரம் 1,2 வசனங்களில் சொல்லியுள்ள கருத்தைச் சிந்திக்கும்படி வேண்டுகிறோம். ''ஆகையால் என்ன சொல்லுவோம் கிருபை பெருகும்படிக்குப் பாவத்திலே நிலை நிற்கலாம் என்று சொல்லுவோமா? கூடாதே''.

''பாவத்துக்கு மரித்த நாம் இனி அதிலே எப்படிப் பிழைப்போம்?'' அப்படிப்பட்ட சிந்தையோடு நடந்து கொள்பவர்கள் யூதா நான்காம் வசனத்தில் சொல்லப்பட்டவர்களுக்குச் சமானமானவர்கள். ''தேவனுடைய கிருபையை காம விகாரத்துக்கு ஏதுவாகப் புரட்டி, ஒன்றான ஆண்டவராகிய தேவனையும் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவையும் மறுதலிக்கிற பக்தியற்றவர்களாகிய சிலர் பக்க வழியாய் நுழைந்திருக்கிறார்கள். அவர்கள் இந்த ஆக்கினைக்குள்ளாவார்களென்று பூர்வத்திலே எழுதியிருக்கிறது''. ஆகவே தேவனுடைய கிருபையைத் தவறான நோக்கோடு பெற்றுக்கொள்ள முயன்றால் கிருபை எட்டாக் கனி ஆகி விடும்.

**'கிருபை என்பது இரட்சிப்பு அல்ல'** எபே 2:5ல் .. ''கிருபையினாலே இரட்சிக்கப்பட்டீர்கள் என்று வாசிக்கிறோம்.

ஒருவனுடைய இரட்சிப்பும் தேவனுடைய கிருபையும் இரண்டு வித்தியாசமான காரியங்கள். அதாவது ஒருவன் இரட்சிப்படைகிறான்; அதற்கு தேவனுடைய கிருபை காரணம்.

**கிருபை என்பது இரக்கமல்ல.**

கிருபை என்பது நாம் ஒன்றைப் பெற்றுக் கொள்ளத் தகுதியில்லாத ஒரு நிலையில் ஒரு நன்மையை ஈவாகப் பெற்றுக் கொள்வதாகும், இரக்கம் என்பது ஒருவனுக்குக் கிடைக்க வேண்டிய நியாயத் தீர்ப்பை அல்லது தண்டனையை நிறுத்தி வைப்பது ஆகும் கிருபை சில நன்மைகளை ஈவாகப் பெற்றுத் தருகிறது. ஏனெனில் தேவ இரக்கம் நமக்குக் கிடைப்பதால், ''ஆதலால்

நாம் இரக்கத்தைப் பெறவும் ஏற்ற சமயத்தில் சகாயஞ் செய்யும் கிருபையை அடையவும், தைரியமாய்க் கிருபாசனத்தண்டையிலே சேரக் கடவோம்'' (எபி 4:16) கூறுவதை வாசித்துச் சிந்தியுங்கள்.

**கிருபை என்பது நிபந்தனை ஏதும் இல்லாமல் பெற்றுக் கொள்வதல்ல.**

அநேகர் வேதாகம உண்மைகளை இருட்டடிப்புச் செய்து கிருபையைப் பெற்றுக் கொள்வதற்கு எந்த நிபந்தனையும் கிடையாது என்று போதித்து மக்களை வஞ்சித்து, அவர்களிடமிருந்து காணிக்கை என்ற பெயரில் கையூட்டுப் பெற்று தங்களை வளப் படுத்தி கொண்டு உலா வருகிறார்கள். அப்படியானால் கீழ்வரும் வசனங்களுககு என்ன பொருள் என்று சிந்தியுங்கள். ''ஏனெனில், எல்லா மனுஷருக்கும் இரட்சிப்பை அளிக்கத் தக்கதாக தேவ கிருபையானது பிரசன்னமாகி நாம் அவபக்தியையும், லௌகிக இச்சைகளையும் வெறுத்து தெளிந்த புத்தியும், நீதியும், தேவ-பக்தியும் இவ்வுலகத்தில் ஜீவனம் பண்ண வேண்டும்'' என்று கூறுகிறது. (தீத்து 2:11-12)

**இறுதியாக, கிருபையை நிபந்தனையில்லாமல் தக்க வைத்துக் கொள்ள முடியாது.**

தேவனுடைய கிருபையை ஒருதரம் பெற்றுக் கொண்டவன் எவ்வளவு அயோக்கியத்தனமாக நடந்து கொண்டாலும் அது அவனை விட்டு நீங்காது; அவன் நித்தியத்துக்கென்று முத்திரிக்கப் பட்டு விட்டான்; பரலோகம் அவனுக்குச் சொந்தமாகி விட்டது என்று உபதேசித்து தங்கள் பொய்ப் போதகத்தினால் மக்களை தெய்வபயமற்றவர்களாக்கி வருகிறார்கள். இது வேதாகம போ-தனைக்கு முற்றும் முரணானது. ''தேவனுடைய கிருபையை நீங்கள் விருதாவாய்ப் பெறாதபடிக்கு உடன் வேலையாட்களாகிய நாங்கள் உங்களுக்குப் புத்தி சொல்லுகிறோம்'' என்றும் (2கொரி 6:1) ''நியாயப் பிரமாணத்தினால் நீதிமான்களாக விரும்புகிற நீங்-கள் யாவரும் கிறிஸ்துவை விட்டுப் பிரிந்து கிருபையினின்று விழுந்-தீர்கள்'' என்றும் (கலா 5:4) பவுல் அப்போஸ்தலன் எழுதுகிறார். ''தேவனுடைய கிருபையை விருதவாய்ப் பெறாதபடிக்கு'' என்றும், "கிருபையிலிருந்து விழுந்தீர்கள்" என்ற சொற்றொடர்களும் நமக்-குக் கூறுகிற உண்மை என்ன? கிருபையைப் பெற்றுக் கொண்ட ஒருவன் அதை அலட்சியப்படுத்தும் வகையில் நடந்து கொண்டால் கிருபை அவனை விட்டு எடுத்துக் கொள்ளப்படும் என்பது தானே! மேலும் எபிரேய நிருப ஆசிரியர் கூறுவதையும் கேளுங்கள். ''யாவ-

ரோடும் சமாதானமாயிருக்கவும் பரிசுத்தமுள்ளவர்களாயிருக்கவும் நாடுங்கள். பரிசுத்தமில்லாத ஒருவனும் கர்த்தரை தரிசிப்பதில்லையே

ஒருவனும் தேவனுடைய கிருபையை இழந்து போகாதபடிக்கும் யாதொரு கசப்பான வேர் முளைத் தெழும்பிக் கலக்கமுண்டாக்குகிறதினாலே அநேகர் தீட்டுப்படாதபடிக்கும்..(எபி 12: 14,15) என்று எச்சரிக்கிறார். தயவு செய்து இவைகளைச் சிந்தித்துப் பாருங்கள்.

தேவனுடைய கிருபை அன்றாட வாழ்க்கையில் தெளிவாக நமக்குத் தெரிகிறது. இயேசு சொன்னதைப் போல.. ''அவர் தீயோர் மேலும் நல்லோர் மேலும் தமது சூரியனை உதிக்கப் பண்ணி நீதியுள்ளவர்கள் மேலும் அநீதியுள்ளவர்கள் மேலும் மழையைப் பெய்யப் பண்ணுகிறார் (மத் 5:45) ஒரு சிறு பெண்ணை உணவு வேளையின் போது ஜெபிக்கச் சொன்ன போது ''இந்த ஆகாரம் எல்லாம் வல்ல தேவனுடைய கிருபையினால் எங்களுக்குக் கொண்டு வரப்பட்டது என்று கூறி ஜெபித்தாள். எவ்வளவு உண்மை! நம்முடைய அனுதினத் தேவைகள் சந்திக்கப்படும் பொழுது, இவ்வுலக வாழ்க்கையில் அன்றாடம் நாம் தேவனுடைய கிருபையை அனுபவிக்கிறோம்.

அதே போல ஆவிக்குரிய வாழ்க்கையிலும் ஒருவனுடைய வாழ்க்கை மாற்றப்படும் ஒவ்வொரு நேரத்திலும் அலலது ஒருவனுடைய விசுவாசம் பலப்படும்போதும் தேவனுடைய கிருபையைப் பார்க்கிறோம்.

இப்பொழுது சொல்லுங்கள் கிருபை என்றால் என்ன? கிருபை என்பது கிரியை செய்கிற தேவனுடைய அன்பு. அவருடைய அளவற்ற அன்புக்காக நாம் எப்பொழுதும் அவருக்கு ஸ்தோத்திரம் செலுத்தி ''நான் இருக்கிறது தேவ கிருபையினாலே இருக்கிறேன். (கொரி 15;10) கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டோம் என்று பவுல் அப்போஸ்தலனோடு சேர்ந்து சொல்லுவோமா?

---

தூற்றிக்கொண்டு திரிகிறவன் இரகசியங்களை வெளிப்படுத்துவான் ஆதலால் தன் உதடுகளினால் அலப்புகிறவனோடே கலவாதே,
தன் தகப்பனையும், தன் தாயையும் தூஷிக்கிறவனுடைய தீபம் காரிருளில் அணைந்துபோகும்.
தீமைக்குச் சரிக்கட்டுவேன் என்று சொல்லாதே: கர்த்தருக்குக் காத்திரு. அவர் உன்னை இரட்சிப்பார்.
வாலிபரின் அலங்காரம் அவர்கள் பராக்கிரம்,
முதிர் வயதானவர்களின் மகிமை அவர்கள் நரை.

# மாற்கு 6:41-42 தரும் படிப்பினைகள்

இயேசு செய்த அற்புதங்கள் அனைத்தையும் ஆராய்ந்து பார்த்தால் நமக்கு ஆச்சரியமாக இல்லையா? இவ்வுலகில் அவருடைய ஊழிய காலத்தில் நமது இரட்சகர் வியாதியஸ்தர்களை சுகப்படுத்தினார்; பிசாசுகளைத் துரத்தினார்; குருடர்களுக்குப் பார்வை அளித்தார்; எல்லாவற்றிற்கும் மேலாக மரித்தோரை உயிருடன் எழுப்பினார்.

ஒரு சிறுவன் உண்கிற அளவு உணவைக் கொண்டு இரு வேறு சந்தர்ப்பங்களில் திரளான மக்களுக்கு (4000 பேருக்கு ஒரு முறை, 5000 பேருக்கும் அதிகமான மக்களுக்கு மற்றொரு முறை) திருப்தியாக உணவளித்தார். அவர்கள் உண்டு மீதியானவற்றை கூடை கூடையாக அள்ளி சேகரித்தனர். இவற்றில் ஒரு நிகழ்ச்சி பற்றிய விவரங்களை மாற்கு 6ம் அதிகாரத்தில் காண்கிறோம். ''அப்பொழுது அப்போஸ்தலர் இயேசுவினிடத்தில் கூடி வந்து, தாங்கள் செய்தவைகள் உபதேசித்தவைகள் யாவையும் அவருக்கு அறிவித்தார்கள். அவர் அவர்களை நோக்கி வனாந்தரமான ஓரிடத்தில் தனித்துச் சற்றே இளைப்பாறும்படி போவோம் வாருங்கள் என்றார். தொடர்ந்து மக்கள் கூட்டம் அவர்கள் பிறகே வந்து கொண்டிருந்தபடியால் சாப்பிடுவதற்குக் கூட அவர்களுக்குச் சமயமில்லாதிருந்தது. அப்படியே அவர்கள் தனிமையாய் ஒரு படகில் ஏறி வனாந்தரமான ஒரு இடத்திற்குப் போனார்கள் அவர்கள் புறப்பட்டுப் போகிறதை ஜனங்கள் கண்டார்கள். அவரை அறிந்த அநேகர் சகல பட்டணங்களிலுமிருந்து கால்நடையாய் அவ்விடத்திற்கு ஓடி, அவர்களுக்கு முன்னே அங்கே சேர்ந்து, அவரிடத்தில் கூடி வந்தார்கள். இயேசு கரையில் வந்து, அநேக ஜனங்களைக் கண்டு, அவர்கள் மேய்ப்பனில்லாத ஆடுகளைப் போலிருந்தபடியால், அவர்கள் மேல் மனதுருகி, அநேக காரியங்களை அவர்களுக்கு உபதேசிக்கத் தொடங்கினார். வெகு நேரம் சென்ற பின்பு, அவருடைய சீடர்கள் அவரிடத்தில் வந்து இது வனாந்தரமான இடம், வெகு நேரமுமாயிற்று; புசிக்கிறதற்கும் இவர்களிடத்தில் ஒன்றுமில்லை; ஆகையால் இவர்கள் சுற்றியிருக்கிற கிராமங்களுக்கும் ஊர்களுக்கும் போய், தங்களுக்காக அப்பங்களை வாங்கிக் கொள்ளும்படி இவர்களை அனுப்பிவிட வேண்டும் என்றார்கள். அவர் அவர்களை நோக்கி: நீங்களே அவர்களுக்கு ஆகாரம் கொடுங்கள் என்றார். அதற்கு அவர்கள் நாங்கள் போய் இருநூறு பணத்துக்கு அப்பங்களை வாங்கி இவர்களுக்குப் புசிக்கும்படி கொடுக்கக் கூடுமோ என்றார்கள். அதற்கு அவர் உங்களிடத்தில்

எத்தனை அப்பங்களுண்டு, போய்ப்பாருங்கள் என்றார். அவர்கள் பார்த்து வந்து ஐந்து அப்பங்களும் இரண்டு மீன்களும் உண்டு என்றார்கள். அப்பொழுது எல்லாரையும் பசும் புல்லின் மேல் பந்தி பந்தியாக உட்கார வைக்கும்படி அவர்களுக்குக் கட்டளையிட்டார். அப்படியே வரிசை வரிசையாய், நூறு நூறு பேராகவும் ஐம்பதைம்பது பேராகவும், உட்கார்ந்தார்கள். அவர் அந்த ஐந்து அப்பங்களையும், அந்த இரண்டு மீன்களையும் எடுத்து வானத்தை அண்ணாந்து பார்த்து, ஆசீர்வதித்து, அப்பங்களைப் பிட்டு, அவர்களுக்குப் பரிமாறும்படி தம்முடைய சீடர்களிடத்தில் கொடுத்தார். அப்படியே இரண்டு மீன்களையும் எல்லாருக்கும் பங்கிட்டார். எல்லாரும் சாப்பிட்டுத் திருப்தியடைந்தார்கள். மேலும் அப்பங்களிலும் மீன்களிலும் மீதியான துணிக்கைகளைப் பன்னிரண்டு கூடை நிறைய எடுத்தார்கள். அப்பம் சாப்பிட்ட புருஷர்கள் ஏறக்குறைய ஐயாயிரம் பேராயிருந்தார்கள்''. (மாற்கு 6: 30-44).

அந்நேரத்திலே அங்கு கூடியிருந்த திரளான மக்களிடையே இயேசு செய்த பெரும் அற்புதச் செயலை சிறிது சிந்தித்துப் பாருங்கள். இந்நிகழ்ச்சியில், குறிப்பாக 41, 42 ஆகிய இரு வசனங்களைக் கவனிப்போம். இயேசு செய்த நான்கு காரியங்களையும், 5000 மக்களுக்கு அவர் அற்புதமாக உணவளித்த போது அம்மக்களால் செய்யப்பட்ட இரண்டு காரியங்களையும் மாற்கு இவ்வசனங்களில் குறிப்பிடுகிறார். இவற்றின் மூலமாக சில முக்கியமான பாடங்களை நாம் கற்றுக் கொள்ள முடியும்.

முதலாவதாக, இயேசு அப்பங்களையும், மீன்களையும் கையில் எடுத்து வானத்தை நோக்கிப் பார்த்ததாக மாற்கு கூறுகிறார். இயேசு அவற்றை கையில் எடுத்தபோது அவை சாதாரண அப்பமும் சாதாரண மீனுமாகத்தான் இருந்தன; முக்கியத்துவம் எதையும் பெற்றிருக்கவில்லை. ஆனால் அவற்றை ஒரு பெரிய செயலாக்கினார். 5000 மக்களை திருப்திப் படுத்தும் உணவாக்கினார். இதைப்படிக்கும் சகோதரனே! சகோதரியே! நீயும் உன்னைப் பற்றி சாதாரணமாகவே எடை போடக் கூடும். உன்னிலே பெரிய தாலந்துகளோ, திறமைகளோ, தனித்தன்மைகளோ காணப்படாமல் இருக்கக்கூடும். ஆனால் ஒரு சிறு அப்பத்துண்டையும், மீனையும் கொண்டு இயேசு எவ்வாறு பெரியதோர் விருந்து படைத்தாரோ, அது போல உன்னையும் பெரிய காரியங்களைச் செய்யும் வல்லவனாக்க கூடும். ஒருவன் தேவனுடைய பிள்ளைகளில் ஒருவனாக மாறும்போது அவன் அதிமுக்கியத்துவம் பெற்றவனாகிறான். ''நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியிடத்திற்கு வரவழைத்தவருடைய

புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்து கொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள். முன்னே நீங்கள் தேவனுடைய ஜனங்களாய் இருக்கவில்லை, இப்பொழுதோ அவருடைய ஜனங்களாயிருக்கிறீர்கள்; முன்னே நீங்கள் இரக்கம் பெறாதவர்களாயிருந்தீர்கள், இப்பொழுதோ இரக்கம் பெற்றவர்களாயிருக்கிறீர்கள்.'' (1 பேதுரு 2: 9; 10)

அடுத்து, இயேசு அவ்வுணவை ஆசீர்வதித்தார் என நமக்குச் சொல்லப்படுகிறது. அவ்வுணவிற்காக ஜெபிக்கிறார். இயேசுவின் இவ்வுலக வாழ்வில், அவர் செய்த பெரிய அற்புதங்களுக்கு முன்னர் ஜெபம் செய்தார் என வேதாகமம் பல இடங்களில் தெளிவுபடுத்துகிறது. ஜெபம் செய்து எந்தக் காரியத்தையும் தொடங்க வேண்டும் என்ற படிப்பினையை நாமும் நினைவில் கொள்ள வேண்டும். ''ஒவ்வொரு காரியமும் தேவன் பேரில் சார்ந்துள்ளதாக எண்ணி ஜெபம் செய்; வேலை செய்யும் போதோ நீயே அவற்றிற்குப் பொறுப்பு என எண்ணி செயல்படு ''என ஒரு பெரிய மனிதர் இக்கட்டுரையாளரிடம் அடிக்கடி நினைவு படுத்துவதுண்டு. இயேசுவும் இப்படியே செய்தார்; நாமும் அவ்வாறே செய்வோம்.

மூன்றாவதாக, இயேசு தனது சீடர்களிடம் அவ்வுணவைக் கொடுத்து மக்களுக்குப் பரிமாறச் சொன்னதாக நாம் படிக்கிறோம். தேவையானவர்களுக்கு (பசித்தோருக்கு) பெரிய ஒரு ஆசீர் வாதத்தை (உணவு) அவர் வழங்கினார். இன்றும் அவருடைய ஆசீர்வாதங்களை தேவைப்பட்டவர்களுக்கு அளித்துக் கொண்டிருக்கிறார். உலகப் பூர்வமான காரியங்களுக்கும் தனது ஆசீர்வாதங்களை அவர் தருகிறார். அப்போஸ்தலர் நடபடி 4ம் அதிகாரம் 17ம் வசனம் கூறுகிறபடி அவர் ''.... வானத்திலிருந்து மழைகளையும் செழிப்புள்ள காலங்களையும் நமக்குத் தந்து, ஆகாரத்தினாலும் சந்தோஷத்தாலும் நம்முடைய இதயங்களை நிரப்புகிறார்.'' அவரைப் பின்பற்றும் மக்களுடைய சரீரத்தேவைகள் யாவையும் இயேசு சந்திக்கிறார். (மத்.6:25-34). எல்லாவற்றிற்கும் மேலாக, அவருடைய ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை அள்ளித் தருகிறார். அவருடைய வசனங்களுக்குக் கீழ்ப்படியும் ஒவ்வொருவரும் அப்போஸ்தலர் பவுலோடு சேர்ந்து, ''நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம்; அவர் கிறிஸ்துவுக்குள் உன்னதங்களிலே ஆவிக்குரிய சகல ஆசீர் வாதத்தினாலும் நம்மை ஆசீர்வதித்திருக்கிறார்,'' (எபே. 1:3) எனக் கூறமுடியும்.

இனி, இயேசுவோடு கூடியிருந்த அந்த மக்கள் செய்த இரு காரியங்களைப் பற்றி நாம் கவனிப்போம். முதலாவதாக, அவர்கள் எல்லோரும் திருப்தியாக உண்டனர். வேறு விதமாகக் கூறினால், அவர்கள் இயேசு அளித்த ஆசீர்வாதங்களை ஏற்றுக் கொண்டு பயனடைந்தனர். இன்று வாழும் நமக்கும் நமது தேவன் பெரிய ஆசீர்வாதங்களைத் தருகிறார் என நாம் ஏற்கனவே கூறியதை எண்ணிப்பார்க்கிறீர்களா! வேதனை என்னவென்றால் அவர் அளிக்கும் ஆசீர்வாதங்களை பலர் ஏற்றுக் கொள்ளத் தவறி விடுகின்றனர். தங்களுடைய கீழ்ப்படியாமையால் தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ள சிலர் தவறிப் போகின்றனர். (மத் 23:37-38) இன்னும் சிலர் தேவனுடைய ஆசீர்வாதங்களை தேடத் தவறி விடுவதால் அவற்றை இழந்து போகின்றனர். (மத் 7;7-11)

இறுதியாக, எல்லோரும் உணவருந்திய பின் மிகுதியான அப்பங்களையும், மீன்களையும் 12 கூடைகளில் சீடர்கள் சேகரித்தனர். சாப்பிட்டவர்கள் எல்லாரும் திருப்தியடைந்தனர். என்றாலும், எதுவும் வீணாகாதபடி இயேசு உறுதி செய்து கொண்டார். தாங்கள் பெற்றுக் கொண்ட பரிசுகளை பரிபாலிக்கும் சிறந்த உக்கிராணக்காரனாக செயல்படும் விதத்தை, தன்னைப் பின்பற்றியவர்களுக்குக் காண்பித்தார். தன்னைப் பின்பற்றுவோர், தங்களுடைய நேரங்கள் தாலந்துகள்' சொத்துகள் மற்றும் அவர்கள் பெற்றசகலஆசிர்வாதங்களையும் நல்லஉக்கிராணக்காரராக இருந்து செயல்படுத்த வேண்டுமென தேவன் விரும்புகிறார். (மத் 25;1-10

இதை வாசிக்கும் சகலரும் தேவனுடைய கட்டளைகளுக்கு தங்களை ஒப்புக் கொடுத்து. அவர் பேரில் விசுவாசத்தை வைத்து, அவர் அளிக்கும் ஆசிர்வாதங்களை நன்றியுடன் பெற்று, கிடைக்கும் பரிசுகளை பரிபாலிக்கும் நல்ல உக்கிராணக்காரராய் செயல்படுவோம்.

**ரோஜர் ஷிஃப்லெட்** **தமிழில் ; S.S ராஜன்**

---

சுமை சுமந்து சோர்ந்திருப்பவர்களே, எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள். உங்களை நான் இளைப்பாற்றுவேன். உங்கள் மேல் என் நுகத்தை ஏற்றுக் கொண்டு என்னிடம் கற்றுக்கொள்ளுங்கள். ஏனெனில் நான் சாந்தமும், மனத்தாழ்மையும் உள்ளவன். உங்கள் ஆன்மாவிற்கு இளைப்பாறுதல் கிடைக்கும். ஆம். என் நுகம் மென்மையானது. என் சுமையும் எளிது.

மத். 11 : 28 - 30

---

# செத்த ஈக்கள்

'செத்த ஈக்கள் தைலக்காரனுடைய பரிமள தைலத்தை நாறிக் கெட்டுப்போகப் பண்ணும்; ஞானத்திலும் கனத்திலும் பேர்பெற்றவனைச் சொற்ப மதியீனமும் அப்படியே செய்யும்.'

எனக்கு ஓர் அம்மாவைத் தெரியும். அவர்கள் மிகவும் திறமையுள்ளவர்கள். நான் அவர்களைச் சந்திக்கச் செல்லும்போது மிகவும் அன்பாகப் பேசுவார்கள், நன்றாக உபசரிப்பார்கள், நல்ல ஜெப வாழ்வு உடையவர்கள், சபைக் காரியங்களில் முன்நின்று ஒத்துழைப்பார்கள். ஆனால் சபையிலுள்ள ஏனையோர் அந்த அம்மாவை மிகவும் நல்லவர் என்று கூறுவதில்லை. காரணம், கோள்சொல்லிப் புறங்கூறுவதில் இவர்கள் கை தேர்ந்தவர்களாம். யாரும் நம்பிக்கையுடன் ஒரு காரியத்தை இவர்களிடம் கூற முடியாதாம். கடைசியில் நானே இந்த சங்கடத்தை அனுபவிக்க நேர்ந்தது. அதற்குப் பின் அந்த அம்மா என்றால் நான் மிகவும் எச்சரிக்கையாயிருப்பேன். இவர்களை நினைக்கும் போதெல்லாம் எனக்கு பிரசங்கி 10:1 தான் நினைவுக்கு வரும். ஒருவேளை பெரிய பாவமாயிருந்தால் விட்டுவிடலாம். ஆனால் இந்தச் சொற்ப மதியீனத்தை - ஒரு செத்த ஈயைவிலக்குவது சிலருக்கு வாழ்க்கையிலே கடினமாகப் போய்விடுகிறது. நாம் பெற்றிருக்கும் பெரிய தாலந்துகளை நஷ்டமாக்குவதற்கு ஒரு செத்த ஈ போதுமானது. வாழ்க்கையில் ஒரு சிறு காரியத்திலும் நாம் அதிக விழிப்புள்ளவர்களாய் இருக்க இந்த வசனம் அறிவுறுத்துகிறது.

**முதலாவது தைலக் குப்பியை மூடிப்பாதுகாப்பதில் நாம் அதிக விழிப்புள்ளவர்களாயிருக்க வேண்டும்.** திறப்பு எங்கே இருக்கிறது என்று சாத்தான் தேடி நடக்கிறான். கிறிஸ்தவ வாழ்க்கை சுயாதீனமானது என்று நினைத்து நிர்விசாரமாய் வாழ்வது அபாயகரமானது. நம்மிடத்தில் அதிகம் கொடுக்கப்பட்டால் அதிகம் கேட்கப்படும் என்று ஆண்டவர் கூறினார். (லூக் 12:48). எனவே சுயாதீனம் மிகவும் பொறுப்பான வாழ்க்கைக்கு நம்மை நடத்த வேண்டும். 'உன்னைக் குறித்தும் உன் போதனையைக் குறித்தும் எச்சரிக்கையாயிரு' என்று தீமோத்தேயுவுக்குப் பவுல் புத்தி சொல்லுகிறார். (1 தீமோ. 4:16). இந்த புத்திமதி எல்லாருக்கும் உரியதாகும். எல்லாக் காவலோடும் நம் இதயத்தைக் காத்துக் கொள்ளும் போது நச்சுச் சிந்தனைகளான செத்த ஈக்களுக்கு நம் சிந்தனைகள் தப்பித்துக் கொள்ளும். நமது உடல் ஓர் இயந்திரம் போன்றது. அதன் ஒவ்வொரு உறுப்பும் வேகமாக இயங்கக் கூடியது. அவைகளின் செயற்பாடு நமது கட்டுப்பாட்டுக்குள் இருக்கும்போது நமது உடலைப் பரிசுத்த ஆவியின் ஆலயமாகப் பாதுகாத்துக் கொள்ளலாம். குறிப்பாக, நாவு நமது உடலில் ஒரு சிறு அவயமாக இருந்தும் அது நமது முழு உடலையும் கறைப்

படுத்தி வாழ்க்கைச் சக்கரத்தையே கொளுத்தி நாசமாக்கும் தன்மையுள்ளது (யாக் 3:5,6) ஒரே ஒரு தகாத வார்த்தையினால் எத்தனையோ சண்டைகள்! பிரிவினைகள்! நாம் நமது தைலக் குப்பியாகிய உடல், உள்ளம் ஆவி அனைத்தையும் அதிக விழிப்புடன் காத்துக் கொள்வோமாக. விழிப்புணர்ச்சி இல்லாத பேதுரு கெத்சமேனேயில் பதில் சொல்ல முடியாமல் தள்ளாடுவதும், திடீர் வேகத்தில் பட்டயம் எடுப்பதும் நமக்கு வேடிக்கையாக இருக்கிறதல்லவா?

**இரண்டாவது பரிமள தைலத்தின் உயர்வையும் விலையையும் உணர்ந்து நாம் விழிப்புள்ளவர்களாயிருக்க வேண்டும்;** பரிமள தைலம் என்பது பலவிதமானவாசனைத் திரவியங்கள் கலந்த ஒன்றாகும். கூட்டங்களில் பிறர் முகர்ந்து மகிழ்ச்சியடையும்படி சிறப்பு நிகழ்ச்சிகள் எல்லாவற்றிலும் இது பயன்படுத்தப்படும். உன்னதப் பாட்டில் வரும் காதல் வருணனைகளில் பரிமளத் தைலம் இடம்பெறுகிறது. மகிழ்ச்சி, பாசம் இவைகளுக்கு அது அடையாளமாயிருக்கிறது. 'உமது பரிமள தைலங்கள் இன்பமான வாசனையுள்ளவைகள்; உமது நாமம் ஊற்றுண்ட பரிமள தைலம்போலிருக்கிறது; ஆகையால் கன்னியர்கள் உம்மை நேசிக்கிறார்கள்' (உன் 1;3). நாம் தெரிந்து கொண்ட வேதப் பகுதியில் ஞானம், செல்வாக்கு ஆகியவைகளைப் பரிமள தைலத்திற்கு ஒப்பிட்டுப் பேசுகிறார் பிரசங்கி. நமக்குக் கிடைக்கின்ற அறிவு-செல்வம், செல்வாக்கு, பட்டம், பதவி அனைத்தும் உயரிய நோக்கங்களுடன் கடவுள் தரும் அருட் கொடைகளாகும். எனவே அந்தந்த நோக்கம் நிறைவேறும்படி அவைகளை மதிப்புடன் காத்துக்கொள்ள வேண்டும். பெரிய மாடி வீடு ஒன்றைக் கட்டிவைத்து விட்டு, குப்பைகூளங்களை முன் வாசற்படியில் கொட்டி வைத்தால் அது அந்த வீட்டின் அழகையும், மதிப்பையும் கெடுத்து விடும். அதனால் அந்த வீட்டின் ஏஜமான் பண்ணப்படுவான். நாம் இகழப்படும் போது கடவுளும்இகழப்படுகிறார், கிறிஸ்தவன் என்கிற பெயரைத் தரித்துப் கொண்டு தகாத செயல்களில் ஈடுபட்டால் நாம் கிறிஸ்துவை இன்னும் சிலுவையில் அறைகிறோம் என்பது தானே பொருள்.

**மூன்றாவது, நம்மைச் சுற்றிப் பறந்துவரும் ஈக்களைப் பற்றி நாம் விழிப்புள்ளவர்களாயிருக்க வேண்டும்:** துர்நாற்றம் உள்ள இடங்களிலும் அதிக நறுமணம் உள்ள இடங்களிலும் ஈக்களின் வேலை அதிகம். முதலில் பறந்து வரும் பின் தைலத்தை மொய்த்துவிட்டுப் போய்விடும். இப்படிப் பல தடவை செய்தால் அது இறுதியில் பறந்துபோய்விடும் என்று நினைப்போம். இல்லை, அது தைலத்தில் விழுந்து விடுகிறது. உயிருள்ள ஈ செத்த ஈயாக மாறுகிறது. அது பின்னர் நறுமணம் கமழும் தைலக் குப்பியை துர்நாற்றம் அடிக்க வைத்துவிடும். சமுதாயத்தில் பொதுவாகத் தீமையானது என்று கருதப்படும் சில

கெட்ட பழக்கங்களைக் கிறிஸ்தவர்கள் 'அதிலும் முன்னணியில் இருப்பவர்கள் கடைப்பிடிப்பது என் மனதை வேதனைப்படுத்தும் செயல்களில் ஒன்று. தட்டிக்கேட்டால் எதிர்வாதம் பல கோணங்களில் வரும். 'இதெல்லாம் எங்களைக் கறைப்படுத்தாது. சந்தர்ப்பத்திற்கேற்ப பயன்படுத்துவதில் தவறில்லை என்பார்கள். உண்மை தான். முதலில் அது உயிருள்ள ஈயாகப் பறந்து வந்து விட்டுத் தான் செல்லும். ஆனால் சிலருடைய வாழ்வில் அது செத்த ஈயாக மாறி, அந்தப் பழக்கத்தில் அடிமைப்பட்டு அதிலிருந்து மீளமுடியாதபடி செய்துவிடும். உலகில் பொருட்களை அனுபவிப்பதற்கு ஒரே ஒரு பிரமாணம் தான் தெளிவாக உள்ளது. 'எல்லாவற்றையும் அனுபவிக்க எனக்கு உரிமை உண்டு ஆனால் எல்லாம் பயனுடையதாயிராது; எல்லாவற்றையும் அனுபவிக்க எனக்கு உரிமை உண்டு; ஆனால் ஒன்றுக்கும் நான் அடிமைப்படமாட்டேன்' (1 கொ. 6:12)

எனக்கு நினைவுக்கு வருகின்ற நிகழ்ச்சியைக் கூறி முடிக்க ஆசைப்படுகிறேன். ஒரு பெரிய ஊர்வலம் சென்றுகொண்டிருந்தது. அதன் நடுவே ஒரு யானை மிக்வும் அழகாக அலங்கரிக்கப்பட்டு மணி ஓசையுடன் சென்றுகொண்டிருந்தது அது ஒரு கோயில் யானை. ஓர் இடத்திற்கு வந்தவுடன் கூட்டத்தார் அனைவரும் 'கொல்' என்று சிரித்தார்கள். என்னவென்று விசாரித்தேன். அந்த யானை அந்த இடத்தில் வந்தபோது பக்கத்தில் கிடந்த ஒரு காய்ந்த பழத்தோலை எடுக்க தனது நடைத்திசையை விட்டுத் திரும்பினதாம். நாமும் சிரிக்கலாம். ஆனால் நம்மைப் பார்த்துச் சிரிப்பவர்களும் பலர். இயேசுகிறிஸ்துவின் புகழ்ச்சிக்காகவும், நாம் கூறும் வார்த்தைகள் எல்லா நம்பிக்கையோடும் ஏற்றுக்கொள்ளப்படவும் நாம் நம்மிடத்தில் குடிகொண்டிருக்கும் சில பழக்கங்களை, சுபாவங்களை விட்டு விட ஆயத்தப்படுவோமா? பவுல் அப்போஸ்தலனின் வீரமுள்ள சாட்சியைப் பாருங்கள். 'இரட்சிக்கப்படுகிறவர்களுக்குள்ளேயும், கெட்டுப்போகிறவர்களுக்குள்ளேயும் நாங்கள் கிறிஸ்துவின் நற்கந்தமாயும், ஜீவ வாசனையாகவுமிருக்கிறோம்' (2 கொ. 2:16, 17).

**ராஜநாயகம்**

**28-ம் பக்க தொடர்ச்சி**

தெரியாதபடி குழப்பம் அடைந்துள்ளனர். எல்லோரும் இயேசுவைத் தானே போதிக்கிறார்கள். நமக்குச் சௌகரியமான ஏதோ ஒன்றை ஏற்றுக்கொள்ள வேண்டியது தானே என்று அப்பாவித்தனமாக எண்ணி மோசம் போகிறார்கள். பாலும், கள்ளும் ஒரே நிறம் என்பதால் பாலை அருந்துவதற்கு பதிலாக கள்ளை அருந்துபவனுடைய நிலையில் மக்கள் இருக்கிறார்கள், கள் அருந்தினவன் தடுமாறிதள்ளாடி நடக்கிறான். கள்ள போதங்களைக் கேட்டு மயங்கினவர்கள் ஆன்மாவிலே குழப்பம் அடைந்து விசுவாசத்தில் தள்ளாடி தடுமாறுகின்றனர்

இதை வாசிக்கும் நண்பரே! சகோதரியே! சிந்தியுங்கள். தெளிவடையுங்கள். புதிய ஏற்பாட்டு இரட்சிப்பின் திட்டத்தை ஏற்றுக்கொண்டு இரட்சிப்படையுங்கள். புதிய ஏற்பாட்டுத் திட்டத்தின்படி ஆவியோடும் உண்மையோடும் தேவனை ஆராதிக்க முன் வாருங்கள். புதிய ஏற்பாட்டு மாதிரியைப் பின்பற்றுகிற கிறிஸ்துவின் சபையில் அங்கமாகுங்கள். பரமபிதா நடாத நாற்றெல்லாம் வேரோடு பிடுங்கப்படும். காலம் சமீபித்துக் கொண்டிருக்கிறது. மத் 15 : 13.

**D. சாமுவேல்ராஜ்**

# புதிய ஏற்பாட்டின் இரட்சிப்பின் திட்டம்

உலகில் பல மதங்களும், கிறிஸ்துவத்தில் பல பிரிவுகளும் இருப்பது எவ்விதத்திலும் தேவனுக்குப் பிரியமாய் இருக்காது பிரி- வினைகள் மார்ம்சத்தின் கிரியைகள் கலா. 5;19-20. எனவே பிரிவினைகளை அங்கீகரித்துக்கொண்டு ஆவியின் ஒருமைப்பாட்டைக் காத்துக் கொள்ள இயலாது. மற்றும் சமாதானக் கட்டிலும் இருக்க முடியாது எபே 4:3. கிறிஸ்து நாம் அனைவரும் ஐக்கியமாக இருக்க வேண்டும் என்று விரும்புகிறார் என்பதை அநேகர் ஏனோ உணர மறுக்கிறார்கள் யோவான் 17;21. ஐக்கியம்என்பது சிலர் நினைப்பது போன்று மேல் பூச்சான காரியங்களில் மட்டுமல்ல, சபைப் பெயர் முதல் இரட்சிப்பின் திட்டம், ஆராதனை முறை சபை அமைப்பு ஆகிய ஒவ்வொரு அம்சத்திலும் அது காணப்பட வேண்டும். அப் பொழுதுதான் உண்மையான ஐக்கியம் உண்டாக முடியும். ஒன்றியம் (Union) என்பது வேறு; ஒன்றாயிருத்தல் (Unity) என்பது வேறு.

எம்மதமும் சம்மதம் என்பதை நாம் ஒரு போதும் ஏற்றுக் கொள்வதில்லை. அதே போல் எந்த சபையும் சம்மதம் என்பதையும் நாம் ஒரு போதும் ஒப்புக்கொள்ளப் போவதில்லை. அப்படி ஏற்றுக் கொள்வது தேவனுக்கும், அவருடைய சத்தியத்துக்கும் நாம் செய்- யும் மரியாதைக் குறைவு என்பதில் ஐயமில்லை. அவருடைய அனந்த ஞானத்துக்கு நம்முடைய சிற்றறிவைக் கொண்டு திருத்தம் செய்ய முடியும் என்கிற மேட்டிமைச் சிந்தனையையே அது காட்டுகிறது.

கிறிஸ்து உயிர்த்தெழுந்தபின் வந்த முதல் பெந்தேகொஸ்தே நாளில் அதாவது சுமார் கி. பி. 33ல் எருசலம் நகரில் சபை ஸ்தாபிக் கப்பட்டது. அப் 2:41-47. அது இயேசு முன்னறிவித்தபடி நடந்தது மத்16;18. அவர் ஸ்தாபித்த சபை' அவருடைய பெயரால் அழைக்கப் படுவதுதான் நியாயம் ரோமர் 15;16 சபை என்று ஒருமையில்தான் சொன்னூர். அதையே பரிசுத்த ஆவியானவரும் பல இடங்களில் உறுதி செய்கிறார். குறிப்பாக எபே 4:4 சபைக்குத் தலைவர் கிறிஸ்துவே. எபே 1:23 இரட்சகரும் அவரே. எபே5:23 தம்முடைய விலைமதியாத இரத்தத்தால் சபையை மீட்டுக் கொண்டார். அப் 20:28. வானத் திலும் பூமியிலும் சகல அதிகாரங்களும் கிறிஸ்துவுக்கே கொடுக்கப்- பட்டிருக்கிறது. மத் 28:18 அப்படியிருக்க திருத்துவதற்கும் சேர்ப்ப- தற்கும், குறைப்பதற்கும் தனி மனிதனுக்கோ, குழுவுக்கோ ஒரு கூட்டத்துக்கோ ஏது உரிமை?

பிசாசு அநேகருடைய மணக்கண்களை குருடாக்கி விட்டபடி யால் (2 கொரி 4:4) தெய்வீக வெளிப்பாடாகிய சத்தியத்துக்கும், மனித ஞானத்தால் கரைப்பட்டிருக்கிற சத்யத்துக்கும் வித்தியாசம்



(27-ம் பக்கம் பார்க்கவும்)

YOUR ATTENTION PLEASE!

# Radio Sri Lanka Broadcasts

**ENGLISH** The voice of Truth—Speakers: Reggie Gnanasundaram, J. C. Choate, John Stacy.
The Voice of Truth, Post Box 3815, New Delhi- 110049
Mondays-9: 00 to 9: 5 P. M.
Fridays - 7:45 to 8: 00 P. M.

**HINDI** Satya Susasamachar-Speaker : Sunny David.
Satya Susasamachar, Post Box 3815, New Delhi- 110049
Thursdays-9: 00 to 9-15 P. M.
Fridyas-- 9: 00 to 9:15 P. M.
Tuesdays-9 00 to 9:5 P. M.
Sundays-12 45 to 1: 00 P. M.

**TELUGU** The voice of Truth-Speaker: Joshua Gootam
The Voice of Truth, Post Box 80, Kakinada 533001.
Sundays-2.15 to 2:30 P. M.
Tuesdays-2:15 to 2:30 P. M.
Thursdays-2:15 to 2:30 P. M.
Fridays -2:15 to 2:30 P. M.
Saturdays-2:15 to 2:30 P. M.

**TAMIL** The Way of Truth-Speaker : P. R. Swamy.
The way of Truth, Post Box 8405, Bangalore 560084
Tuesdays-5:30 to 5:45 P.M.
Thursdays-6:45 to 7:00 P.M.
Sundays-6:45 to 7:00 P. M.

**MALAYALAM** The Voice of Truth-Speaker: P. K. Varghese
Church of Christ Sunny Meads Lane Trivandrum-34 (Kerala
Tuesdays-3:45 to 4:00 P.M.
Fridays-3:45 to 4:00 P.M.

**KANNADA** The Voice of Truth-Speaker : Robert Rathnakar
Box No 448, Bangalore 560004
Sundays-1:45 to 2:00 P. M.

## ALL ARE ENCOURAGED TO LISTEN

Bible Correspondence Courses and Christian Literature are avilable in these different languages from the addresses listed Also the radio sermons are available in book form.

## வாசக அன்பர்களுக்கு ஓர் வேண்டுகோள்

### ஊழியர் தேவை

பாலாடா பிராந்திய சபையில் ஊழியம் செய்ய வேத பயிற்சி பெற்ற அனுபவமுள்ள முழு நேர ஊழியர் தேவை.

**விபரங்களுக்கு அணுகவும்**

செயலாளர்,
கிறிஸ்துவின் சபை
கேத்தி பாலாடா அஞ்சல்
நீலகிரி.

தங்கள் உண்மையுள்ள,
எஸ். ஹென்றி மோகன்

Published by Church of Christ and Printed at Jeevasakthi Press
Erode-638 003.
Editor. E.Z. Selvanayagam.

PRINTED MATTER BOOK-POST

TO

undelivered please return to
The Editor
THIRUMARAI AASAAN
Post Box No: 58 ERODE-638 001.